வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=




ஈழநாடு
Eelanadu
வார மலர்
Email : news@eelanadu.lk | மலர் : 06 | 16.02.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 47 | பக்கங்கள் : 16

# அரச சார்பற்ற நிறுவனங்கள்மீது இனி உன்னிப்பான கண்காணிப்பு

## அறிவித்தது அநுரகுமார அரசாங்கம்

கொழும்பு, பெப்ரவரி 16

**அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பில் எதிர்காலத்தில் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படும் என பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு, கோட்டையில் நேற்று சனிக்கிழமை கிளீன் சிறிலங்கா நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் சிங்கள, தமிழ் புத்தாண்டுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் தேர்தல் தொடர்பான பணிகள் இடம் பெறும்.

கடந்த பொதுத் தேர்தலைக்காட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு தமது ஆதரவை வழங்குவார்கள் என எதிர் பார்க்கிறோம். தேசிய மக்கள் சக்தி வென்றால் நாட்டுக்கு ஆபத்து,



எதிர்த்தரப்பினர் மீது தாக்குதல்களை நடத்துவார்கள் என மக்களை எதிர்க்கட்சிகள்

15

# தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது அநுரகுமார அரசு

### கூறுகிறார் ரில்வின் சில்வா



கொழும்பு, பெப். 16

"தமிழ் மக்களின் அன்பையும் நம்பிக்கையையும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பெற்றுள்ளது." என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய

15

# அநுரவின் பட்ஜெட் நாளை

கொழும்பு, பெப். 16

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை நாளை முற்பகல் 10.30 மணிக்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதம் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் மார்ச் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கடந்த ஜனவரி 09 ஆம் திகதி முதலாவது

15

# உயர் தரமான கல்வியை வழங்க கல்வித்துறையில் மறுசீரமைப்பு!

### யாழ்ப்பாணத்தில் கூறினார் பிரதமர் ஹரிணி

யாழ்ப்பாணம், பெப். 16

உயர்தரமான கல்வியை வழங்கும் பொருட்டு கல்வித்துறையில் மறுசீரமைப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் காலை யாழ்ப்பாணம்

15



யாழ். இந்துக் கல்லூரியில் நேற்றைய தினம் பிரதமர் ஹரிணி அமரசூரிய பங்கேற்ற தருணம், அருகில் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர்.

# பலாலி - கட்டுநாயக்கா விமான சேவை ஆரம்பிக்கப்படுமானால் மிகச்சிறப்பு!

### வடக்கு ஆளுநரிடம் கூறிய கனடிய தூதுவர்

யாழ்ப்பாணம், பெப். 16

பலாலி விமான நிலையத்துக்கு கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து சேவைகள் இடம்பெற்றால் சிறப்பானது. இலங்கைக்கு வருகை தரும் புலம்பெயர் தமிழர்கள், தமது பயண பொதிகளை பேருந்துகளில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவிட்டு, கொழும்பிலிருந்து சென்னைக்கு சென்று அங்கிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றனர் என கனடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்



கொண்ட இலங்கைக்கான கனடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் வடக்கு மாகாண

15

# யாழில் பல்வேறு நிகழ்வுகளில் நேற்று பங்கேற்றார் பிரதமர்

யாழ்ப்பாணம், பெப். 16

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு சென்ற பிரதமரை வடக்கு மாகாண ஆளுநர் என். வேதநாயகன் வரவேற்றார்.

15

# பெரமுனவில் மீள இணையும் முன்னாள் உறுப்பினர்கள் குழு

கொழும்பு, பெப். 16

பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து விலகிய முன்னாள் உறுப்பினர்கள் குழுவொன்று எதிர்வரும் வாரத்தில் மீள அக்கட்சியில் இணையவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதன்படி, பொதுஜன பெரமுன கட்சியின்

15

# வாகனம் விபத்தில் சிக்கி இளங்குமரன் எம்.பி. காயம்

யாழ்ப்பாணம், பெப். 16

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் நேற்று இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் அவர் யாழ்ப்பாணம்

15

# தமிழ் மக்களின் உணர்வுகளை சீனாவால் மாற்றவே முடியாது!

### அடித்துக் கூறுகிறார் செல்வம் அடைக்கலநாதன்

கொழும்பு, பெப். 16

சீனா அரசாங்கம் வடக்கில் அரிசியும் வலைகளையும் வழங்கி மக்களை அவர்கள் பக்கம் திசை திருப்ப முயற்சித்தபோதிலும் தமிழ் மக்களின் உணர்வுகளை ஒருபோதும் மாற்ற முடியாது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

15

# ரணில் ஓமான் சென்றார்!

கொழும்பு, பெப். 16

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை ஓமான் பயணமானார்.

அந்த நாட்டில் நடைபெறும் மாநாடொன்றில் சிறப்புரையாற்றுவதற்காகவே

15

# அரியாலை மனிதப் புதைகுழி குறித்து தீவிரமாக ஆராய்வது முக்கியமானது

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

செம்மணிக்கு அருகே-அரியாலை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி குறித்து தீவிரமாக ஆராய்வது முக்கியமான ஒன்றாகும். செம்மணி படுகொலைகளின் தகவல்கள் அம்பலமாகிய நிலையில் அது தொடர்பான விசாரணைகள்

15




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிக்கப்படும் விவசாய நிலங்கள்!

## வவுனியா விவசாயிகள் குற்றச்சாட்டு



வவுனியா, பெப்.16

**வவுனியாவில் ஏ-9 வீதியை மையமாக கொண்டு பல விவசாய நிலங்கள் மண்போட்டு நிரப்பட்டு ஆக்கிரமிக்கப்படுவதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

குறிப்பாக வவுனியா, நொச்சிமோட்டை, தாண்டிக்குளம், யாழ். வீதி, பட்டாணிச்சூர் ஆகிய பகுதிகளிலுள்ள விவசாய காணிகளில் மண் போட்டு அவற்றை நிரவி புதிதாக வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள் என்பனவற்றை அமைக்கும் செயல்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விவகாரம் குறித்து ஊடகங்களில் பல தடவைகள் செய்தி வெளிவந்துள்ளதுடன், விவசாயிகளும் கமநல அபிவிருத்தி திணைக்களத்திடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க. விமலரூபனிடம் கேட்ட போது,

"எமக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக விவசாய காணியில் கிரவல் போட்டு நிரப்பும் நடவடிக்கை இடம் பெற்றுள்ளது. இதனை நிறுத்தி உடனடியாக கிரவலை அகற்றுமாறு அறிவுறுத்தியுள்ளோம். தாண்டிக்குளம், பட்டாணிச்சூர் ஆகிய பகுதிகளிலும் குறித்த செயல்பாட்டை இடைநிறுத்துமாறு எமது திணைக்களத்தால் நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடரும். ஏனைய இடங்களிலும் இவ்வாறு நடந்தால் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார்.(ஏ-10)



# வாராந்த நிகழ்வும் உதவிகள் வழங்கலும்

வடமராட்சி, பெப்.16

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த நிகழ்வில் இராமநாதன் அரங்காற்றுகை பீடத்தைச் சேர்ந்த உதயகுமார் சாலினியின் இசைக் கச்சேரி நடைபெற்றது.

இதேவேளை, ஆச்சிரமத்தின் உதவித்திட்டங்களாக மருதங் கேணி பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைய கிராம மட்ட சிறுவர் விளையாட்டு நிகழ்வுக்காக 50ஆயிரம் ரூபாய் பெறுமதியான பரிசுப் பொருட் கள் வழங்கப்பட்டன.

அத்தோடு, விபத்தில் சிக்கி இடுப்புக்கு கீழே இயங்க முடியாத நிலையிலுள்ள சுன்னாகத்தை சேர்ந்த நபர் ஒருவரின் மருத்துவச் செலவுக்காக 50 ஆயிரம் ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது. (ஏ-02)

# இரும்புக்கம்பியால் தாக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, பெப்.16

முல்லைத்தீவு, முள்ளியவளை முறிப்பு பகுதியில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற கைகலப்பில் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

குறித்த பகுதியில் ஒரு குழுவினர் இணைந்து குடும்பஸ்தர் ஒருவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். பின்னர் வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறிய தில் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு, மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

முறிப்பு பகுதியைச் சேர்ந்த மோகன் கோகுலன் (வயது - 36) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. (ஏ)

# அர்ச்சுனா எம்.பியும் மற்றைய தரப்பும் யாழ். பொலிஸ் நிலையத்தில் சமரசம்

யாழ்ப்பாணம், பெப்.16

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, நபர் ஒருவரை தாக்கிய விவகாரம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து இரு தரப்பினரதும் சம்மதத்துடன் சமரசமாக முடித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த 11 ஆம் திகதி இரவு அர்ச்சுனா எம்.பியும் சட்டத்தரணி கௌசல்யாவும் உணவருந்திக் கொண்டிருந்த வேளை அந்த இடத்துக்கு வந்த இருவர், அவர்களுடன் கதைக்க முற்பட்ட நிலையில், தர்க்கமாக மாறி கைக்கலப்பில் முடிந்தது.

கைக்கலப்பில் அர்ச்சுனா எம். பி., நபர் ஒருவரின் தலையில் பீங்கானால் அடித்தமையால், அவர் தலை யில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதனையடுத்து தனது உயிருக்கு ஆபத்து என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் அர்ச்சுனா எம்.பி. முறைப்பாடு செய்தார். அதேவேளை, காயமடைந்த நபரும் தன் மீதான தாக்குதலுக்கும் பரஸ்பர முறைப் பாட்டை பதிவு செய்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இரு தரப்பினரையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து, யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, இரு தரப்பினரும் சமாதானமாக செல்வதாகவும் முறைப்பாடுகளை மீளப் பெற்றுக்கொள்வதாகவும் கூறினர். இரு தரப்பினரும் சமரசமாக செல்வதற்கு உடன்பட்டதை அடுத்து, இரு தரப்பினருக்கும் இடையிலான பிரச்னை பொலிஸ் நிலையத்தில் வைத்து தீர்க்கப்பட்டுள்ளது. (ஏ)

# வடக்கின் அபிவிருத்தி குறித்து அரசு சாதகமான நிலைப்பாடு

## ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.15

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் சாதகமான நிலைப்பாட்டைக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் அதைப்பயன்படுத்தி எமது மாகாணத்தை துரிதமாக அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். இதைப்போன்றதொரு சந்தர்ப்பத்தை நாம் இழக்கக் கூடாது என்று வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நோய்த்தடுப்பு பராமரிப்பு சேவைப் பிரிவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட பாலம் நிறுவனத்தின் நிதியுதவியில் வன்னி ஹோப் நிறுவனம் ஊடாக இந்த மூன்று மாடிக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "சுயநலம் மலிந்த இந்தக் காலத்தில் மற்றையவர்களுக்கு உதவி செய்பவர்கள் அருகிச் செல்கின்றனர்.



அவ்வாறானதொரு நிலைமையில் இவ்வாறான தொரு உதவியைச் செய்வதற்கு முன்வந்தவர்கள் பாராட்டப்படவேண்டியவர்களே. புலம்பெயர்ந்து சென்றாலும் எமது மண்ணுக்கும் மக்களுக்கும் சேவை செய்ய விரும்பும் அவர்களது எண்ணம் மிகப்பெரியது.

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கான தேவைகள் இன்னமும் நிறைய இருக்கின்றன. அவையும் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்"- என்றார். (ஏ- 05)

# மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்.மாவட்ட செயலகமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடத்தும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்வு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மகளிர் விவகாரம் புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் பொ. வாகீசன் கலந்து சிறப்பித்தார்.

மாற்றுத்திறனாளிகளின் திறன்களை மேம்படுத்தும் வகையில் மாவட்ட மட்டத்தில் இத் தடகள விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. 7 வகையான மாற்றுத்திறனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 87 வகையான விளையாட்டுக்கள் நடைபெற்றன.

இதில், நல்லூர் பிரதேச செயலகம் முதலாவது இடத்தையும், பருத்தித்துறை பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டு போட்டியில் வெற்றியீட்டிய விளையாட்டு வீரர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகள், பெற்றோர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர். (ஏ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மைக்கால வரலாற்றில் மிகவும் பலவீனமான ஆட்சி

## அநுரவை சாடிய சஜித்

கொழும்பு, பெப்.16

**அண்மைக்கால வரலாற்றில் உருவான மிகவும் பலவீனமான ஆட்சியே இன்று நாட்டில் காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

10 பிரதான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி தனது வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளது. அவை மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். இன்று, நாடு பயணிக்கும் பாதை தெளிவாக தெரிகிறது. வலுவான அரசாங்கத்துக்கு பதிலாக, வரலாற்றில் மிகவும் தோன்றிய மிகவும் பலவீனமான அரசாங்கமே இங்கு காணப்படுகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரிசையாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். நாட்டில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் வெளிப்படையான கொள்முதல் முறைகளின்படி இடம்பெற வேண்டும். முதலீட்டாளர்களை அரசாங்கம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். 2028 ஆம் ஆண்டளவில் நாம் கடனைச் செலுத்த வேண்டும் என்பதால் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சஜித் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் செயல்பாட்டாளர்களுக்கான செயலமர்வு மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான தேர்தல் தொகுதி அமைப்பாளர் நியமனப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு என்பனவற்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நாடு செலுத்த வேண்டிய கடனையும் வட்டியையும் செலுத்த வேண்டுமானால் அரசு அதிக வருமானத்தையும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி இலக்குகளையும் அடைய வேண்டும். இவ்வாறு நடக்கும் பட்சத்தில் ஒரு நாடாக எம்மால் மீண்டு வர முடியும்.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட இணக்கப்பாடு மற்றும் சர்வதேச பிணை முறி பத்திரதாரர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து ஆராயும் பொருளாதார வல்லுநர்கள், அவர்களுடன் செய்து கொண்டுள்ள இணக்கப்பாடுகளின் இலக்குகளை நாம் அடையாவிட்டால், மற்றொரு கடன் மறுசீரமைப்புக்கு செல்ல வேண்டியிருக்கும் என்று சுட்டிக்காட்டுகின்றனர். இந்த இணக்கப்பாடுகளில் காணப்படும் பலவீனங்களை ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியது. ஆனால், கடந்த அரசாங்கம் செய்த தவறுகளை இந்த அரசாங்கமும் முன்னெடுத்து வருகிறது"- என்றார். (எ)

கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட

# துவிச்சக்கரவண்டி பவனி யாழ்ப்பாணத்துக்கு வந்தது



யாழ்ப்பாணம், பெப்.16

புத்தூரில் உள்ள தூய லூகா மெதடிஸ்த திருச்சபை மருத்துவமனையின் அபிவிருத்திக்கு நிதி சேகரிக்க கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட துவிச்சக்கரவண்டிப் பவனி நேற்றைய தினம் குறித்த மருத்துவமனையை வந்தடைந்தது.

கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் வெளி நாட்டவர்கள் இணைந்து இந்த நிதி திரட்டும் துவிச்சக்கர வண்டி பவனியில் ஈடுபட்டனர்.

80 பேர் கடந்த 12 ஆம் திகதி கொழும்பிலிருந்து இந்த பயணத்தை ஆரம்பித்து நான்கு நாட்கள் பயணம் செய்து நேற்றையதினம் யாழ்ப்பாணத்தின் புத்தூரை வந்தடைந்தனர். இவ்வாறு வருகை தந்தவர்கள் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி மங்கல வாத்தியங்கள் இசைக்க வரவேற்கப்பட்டனர்.

இந்த துவிச்சக்கர வண்டி பவனியில் இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரும் இணைந்து கொண்டு சுமார் 10 கிலோமீற்றர்கள தூரம் துவிச்சக்கர வண்டியில் பயணித்தனர். (எ-05)

# எந்தவித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



பொலநறுவை, பெப்.16

பிள்ளைகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் ஆசிரியர்களை உருவாக்கும் கல்வியியற் கல்லூரி முறைமையில் வழங்கப்படும் ஆசிரியர் பயிற்சியில் கடந்த 15 வருடங்களாக எந்தவித மாற்றங்களுக்கும் ஏற்படுத்தப்படவில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

புலதிசிபுர தேசிய கல்வியியற் கல்லூரியின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட "புலதிசிய தருனை" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

"எமது அரசாங்கம் கல்விக்கு விசேட கவனம் செலுத்தி வருகிறது. நாட்டில் தேவையான மாற்றத்தை ஏற்படுத்த கல்வியின் தரத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது.

2026 ஆம் ஆண்டு முதல் நாம் செய்யப்போகும் கல்விச் சீர்திருத்தம் ஒட்டுப் போடுகின்ற ஏற்கனவேயுள்ள ஒன்றை இழுத்துச்செல்கின்ற ஒரு முறைமையல்ல. இது ஒரு தரமான மற்றும் மனிதாபிமான மற்றும் நவீன உலகை வெற்றி கொள்ளக்கூடிய ஒரு நபரை உருவாக்கும் கல்வி சீர்திருத்தமாகும்.

கல்வியின் தரம் ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது. நாம் எதிர்பார்க்கும் இலக்கை அடைய ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். உலகில் சிறந்த கல்வியை நம்மால் கொண்டுவர முடியும். நவீன தொழில்நுட்பத்தை கொண்டு வர முடியும்.

இதுவரை நடைமுறையில் இருந்த கல்விச் சீர்திருத்தங்களில் மறந்து போன விடயம் என்னவென்றால், ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் அறிவும் அளிக்கும் திட்டம் எதுவும் அவற்றில் இருக்கவில்லை என்பதுதான்.

பயிற்சி மற்றும் அறிவு மூலம் ஆசிரியர்களின் தொழில் முறை தரத்தை மேம்படுத்துவதே எங்கள் முதன்மையான நோக்கமாகும்"- என்றார். (எ)

# 'பந்தடிப்பது' போன்று வேலைகளை தட்டிக்கழித்து அலைக்கழிக்காதீர்கள்

## அரச அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப்.16

அலுவலகத்துக்கு பொது மக்கள் வந்தால் உடனடியாக அவர்களை அன்பாக அணுகி சேவைகளை நிறைவேற்றிக் கொடுங்கள். உங்களால் முடியாவிட்டால் மேலதிகாரிகளிடம் அழைத்துச் சென்று பொதுமகனின் தேவையை எப்படி நிறைவு செய்து கொடுக்கலாம் என்று சிந்தியுங்கள். "பந்தடிப்பது" போன்று வேலைகளை தட்டிக்கழித்து பொது மக்களை அலைக்கழிக்காதீர்கள் என வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் வலியுறுத்தினார்.

கடந்த காலங்களில் தவறாக ஒரு விடயம் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அதையே தொடர்வதற்குத் தான் பலர் விரும்புகின்றனர். அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு யாரும் தயாராக இல்லை. தவறானது என்று தெரிந்தால் அதை முடிவுக்கு கொண்டு வந்து சரியானதைச் செய்ய வேண்டும். இந்த மாற்றத்துக்கு எல்லோரும் தயாராக வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், ஒவ்வொரு மாவட்டங்களினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் ஆகியோரை யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முதலீட்டாளர்கள் வருகைதரும் போது அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து கொடுங்கள். எமது மாகாணத்துக்கு அதிகளவு முதலீடுகள் தேவை.

வடக்கு மாகாணத்தில் 1,500 கிலோ மீற்றர் நீளமான வீதிப் புனரமைப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கின்றது. இதற்கான வீதிகளைத் தெரிவு செய்யும்போது அதிகாரிகள் நேரடியாகச் சென்று பார்வையிட்டு வீதிகளைத் தெரிவு செய்யுங்கள்.

சோலைவரி உட்பட உள்ளூராட்சி மன்றங்களுக்கான அனைத்து கட்டணங்களையும் இணையவழியில் பொதுமகன் செலுத்துவதற்கு ஏற்றவகையில் வழிசெய்யுங்கள்.

வெளிநாட்டு நிதி மூலங்களில் அமைக்கப்பட்ட கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது உள்ளூர் வாசிகளுக்கு முன்னுரிமை வழங்குங்கள். உள்ளூர்வாசிகள் கேள்வி கோரலில் பெற்றுக்கொள்ளாவிடின் மாவட்டத்துக்கு முன்னுரிமை வழங்குங்கள்.

உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்குச் சேவை செய்வதற்கானவையே தவிர வருமானம் ஈட்டுவதற்கானவை அல்ல. சேவைகளை முதலில் மக்களுக்கு வழங்குங்கள்.

சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. அவை அகற்றப்படத்தான் வேண்டும். இவ்வளவு காலமும் இருந்தது என்பதற்காக அதை அப்படியே தொடரவிட முடியாது"- என்றார். (எ)

# பாரதியின் நினைவுக் கூட்டம்

கொழும்பு, பெப்.16

அண்மையில் காலமான மூத்த பத்திரிகை ஆசிரியர் இராஜநாயகம் பாரதி பற்றிய நினைவு வணக்க கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 05. 30 மணிக்கு வெள்ளவத்தையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்க பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நினைவு வணக்க கூட்டத்துக்கு வீரகேசரி நாளிதழ் - வார இதழ் பிரதம ஆசிரியர் எஸ். சிறீகஜன் தலைமை தாங்குவார்.

தமிழ் - சிங்கள பத்திரிகைகளின் மூத்த ஆசிரியர்கள், பிராந்திய செய்தியாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் இலக்கியத் துறையை சேர்ந்த பலரும் இதில் உரையாற்றவுள்ளனர்.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான பாரதி, கொழும்பில் சிங்கள ஊடக அமைப்புகளுடன் இணைந்து 2000 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆம் ஆண்டு வரை பணியாற்றியிருந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம்




காரைதீவு, பெப்.16

**அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் வேலை வாய்ப்பு கோரி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.**

இந்த போராட்டமானது அம்பாறை, காரைதீவு சந்திக்கு அருகாமையில் ஆரம்பமானதுடன் பல்வேறு பதாகைகளை ஏந்தி பட்டதாரிகள் கொளுத்தும் வெயிலில் கவனவீர்ப்புப் போராட்டத்தை அமைதியாக முன்னெடுத்தனர்.

இதன்போது, இதுவரை வேலைவாய்ப்பு தொடர்பில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை எனவும் வெளிப்படையாக பட்டதாரிகளின் நிலைமை குறித்து அரசாங்கம் தகவல்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டமானது அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க உபதலைவர் சதாசிவம் யதுராஜ் தலைமையில் நடைபெற்றதுடன் குறித்த போராட்டத்துக்கு ஆதரவாக ஏனைய வேலையற்ற பட்டதாரிகள் தமது தொழில் உரிமையை வலியுறுத்தும் வகையிலான பல்வேறு கோசங்களையும் எழுப்பி உரிய தரப்பினர் தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்த காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். எஸ். ஜெகத், பொலிஸாருடன் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். (எ)

# பாணந்துறையில் பஸ் விபத்து நால்வர் காயம், சாரதி கைது!

களுத்துறை, பெப்.16

பாணந்துறை மேம்பாலத்துக்கு அருகில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

லுனுகம்வெஹெரவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின் போது, பஸ்ஸில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பயணித்த நிலையில் அவர்களில் நால்வர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பாணந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பஸ்ஸின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# துப்பாக்கிச் சூடு நடத்திய 2 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, பெப்.16

மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லொலுவ பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 27 மற்றும் 33 வயதுடையவர்கள் என்று பொலிஸார் கூறினர்.

கடந்த 07 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், வீதியிலிருந்த நபரொருவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

# இராவண எல்ல வனத்தில் தீ!



பதுளை, பெப்.16

இராவண எல்ல வனப்பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு தீ பரவியுள்ளது.

இதனால் அந்த வனத்தில் உள்ள அதிகளவான நிலப்பரப்பு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

பலத்த காற்று மற்றும் வறண்ட வானிலை காரணமாக தீ பரவலை கட்டுப்படுத்துவதற்கு கடினமாக உள்ளதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எல். உதயகுமார தெரிவித்தார். (எ)


# மண்ணகழ்வை அனுமதிக்கக் கோரி மூதூரில் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, பெப்.16

மூதூர் பிரதேச செயலாளர்கள் பிரிவுக்கு உட்பட்ட இறால் குழி பிரதேசத்தில் மண்ணகழ்வை அனுமதிக்கக் கோரி இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்பிரதேச மக்களின் பிரதான தொழில் மண்ணகழ்வதாகும். தற்போது, இங்கு மண்ணகழ்வு இடைநிறுத்தப்பட்டுள்ளது.



இதனால், இறால் குழி பிரதேச மக்களின் வாழ்வாதாரம் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ளது.எனவே, மண்ணகழ்வு தொழிலை மீண்டும் அனுமதிக்கக் கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.இதில், இளைஞர்கள் உட்பட 60இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (எ)

# வவுனியா போகஸ்வே வெவ - மாமடு வீதி புனரமைக்கப்படாமையால் மக்கள் அவதி

வவுனியா, பெப்.16

வவுனியா, போகஸ்வே வெவ - மாமடு வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் அவ் வீதியை பயன்படுத்த முடியாத நிலையில் மக்கள் இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ளனர்.



வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட போகஸ்வே வெவ கிராமமானது குடியேற்றக் கிராமமாகும். வவுனியாவில் இருந்து குறித்த கிராமத்துக்குச் செல்கின்ற பிரதான வீதியில் மாமடு பகுதியில் இருந்து போகஸ்வே வெவ வரையிலான சுமார் 15 கிலோ மீற்றர் நீளமான வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இதனால் நோயாளர்களைக் கூட அம்புலன்ஸில் உடனடியாக மருத்துவமனைக்கு கொணடு செல்ல முடியாத நிலை காணப்படுவதுடன், பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளும் சீரான போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை நீடிக்கிறது. இதனால், இக் கிராம மக்களும், அங்கு கடமை புரியும் உத்தியோகத்தர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

எனவே, குறித்த வீதியை புனரமைக்க துறைசார் அதிகாரிகளும், அர சாங்கமும் கவனம் செலுத்த வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (எ-10)

# தரிப்பிடங்களை பயன்படுத்தும் சாரதிகளிடம் கட்டணம் அறவீடு

கொழும்பு, பெப்.16

கொழும்பில் பொது வாகன தரிப்பிடங்களில் 10 நிமிடங்களுக்கும் மேலாக வாகனங்களை நிறுத்தி வைக்கும் சாரதிகளிடமிருந்து மாத்திரமே கட்டணம் வசூலிக்கப்படும் என கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் பாலித நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,பொது வாகன தரிப்பிடங்களில் 10 நிமிடங்கள் வாகனங்களை நிறுத்தி வைத்திருக்கும் சாரதிகளிடமிருந்து 70 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுவதோடு வாகனங்களை நிறுத்தி வைக்கும் நேர அளவிற்கு ஏற்ப கட்டணத் தொகை அதிகரிக்கப்படும்.

இந்த நிலையில், காலை 06. 00 மணி முதல் நள்ளிரவு 12. 00 மணி வரை பொது வாகன தரிப்பிடங்களில் வாகனத்தை நிறுத்தி வைக்கும் சாரதிகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படும்.

மேலும், பொது வாகன தரிப்பிடங்களைப் பயன்படுத்தியதற்கான கட்டணத்தை செலுத்திய வாகன சாரதிகளுக்கு பற்றுச்சீட்டுக்களும் வழங்கப்படும்.

எனவே, வாகனங்களை நிறுத்திய உடனேயே கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.மேலும், பௌர்ணமி மற்றும் விசேட விடுமுறை நாட்களில் பொது வாகனத் தரிப்பிடங்களைப் பயன்படுத்தும் வாகனச் சாரதிகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது எனவும் அவர் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
16.02.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், மாசி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தையிட்டி விவகாரத்துக்கான தீர்வு

ஈழத் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு பிடித்துத் தொங்குவதற்கு ஏதாவது ஒன்றில்லாவிட்டால் அவர்களை மக்கள் மறந்துவிடுவார்கள் என்னும் நிலையில், இப்போது, அனைவரும் தையிட்டி தொடர்பில் பேசும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மட்டுமே அவ்வப்போது தையிட்டி தொடர்பில் பேசி வந்திருக்கின்றது. தற்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி கூட அதுபற்றி பேசும் நிலைமை உருவாகியிருக்கின்றது. கஜேந்திரகுமார் தரப்பு நீண்ட காலமாக அது பற்றி பேசி வருகின்றது ஆனால், தையிட்டி விகாரைக்கான அடிக்கல் வைக்கும் போது, ரணில் - மைத்திரி அரசாங்கத்துடன் தேனிலவில் இருந்தவர்களும் இப்போது, அது பற்றிப் பேசுவதானது சற்று நெருடலாகவும் அரசியல் எந்தளவிற்கு போலித்தனமாக மாறிவிட்டது என்பதற்கும் சாட்சியாக இருக்கின்றது.

தமிழ் மக்கள் செறிவாக வாழ்கின்ற இடங்களில், குறிப்பாக, புத்தரை வழிபடுவதற்கான மக்கள் இல்லாத இடங்களில் விகாரைகளை கட்டுவதானது ஓர் ஆக்கிரமிப்பு மனோபாவம் கொண்ட நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை. இதனை ஆட்சியிலுள்ள அரசாங்கங்கள் கண்டும் காணாமல் விடுவதே வழக்கமானது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், விகாரைகளுக்கான நிதி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் அது அரசாங்க நிதியல்ல என்று குறிப்பிட்டிருந்ததை இந்த இடத்தில் குறித்துக் கொள்ளலாம். வெளிநாடுகளிலுள்ள சிங்கள மக்களிடம் சேகரிக்கப்படும் நிதியே இவ்வாறான நடவடிக்கைக்கு அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

எவ்வாறு புங்குடுதீவில் கோவில் கட்டுவதற்கு பெருந்தொகை பணம் புலம்பெயர் புங்குடுதீவுத் தமிழர்களால் வழங்கப்படுகின்றதோ, அதேபோன்றுதான் விகாரைகளுக்கான நிதியும் சிங்கள மக்கள் மத்தியிலேயே திரட்டப்படுகின்றது. எதற்கும் உதவி செய்யாதவர்கள் கூட, கோவில்களுக்கு என்று கேட்கும் போது, சற்று அதிகமாகவே வழங்கும் போக்கொன்று நமது சூழலில் காணப்படுகின்றது. அதே போன்றுதான் விகாரைகளுக்காகவும் சிங்கள வர்த்தகர்களும் வெளிநாடுகளிலுள்ளவர்களும் வழங்குகின்றனர். ஆனால் இதற்கான காணியை அரசாங்கமே வழங்குகின்றது. தையிட்டி விகாரைக்கான காணி தனியாருக்கு சொந்தமானது என்பதுதான் தற்போதைய பிரச்னையாகும். இந்த அரசாங்கத்துக்கும் அதற்கும் தொடர்பு இல்லை.

இந்த அடிப்படையில் நோக்கினால் ஆட்சியிலிருப்பவர்கள் என்னுமடிப்படையில் அரசாங்கத்தை நோக்கி கேரிக்கையை முன்வைத்தாலும் கூட, நல்லாட்சி காலத்தில் இதற்கு பொறுப்பானவர்களை நோக்கியும் ஈழத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்ப வேண்டும். குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரை நோக்கியும் கேள்விகளை முன்வைக்க வேண்டும். ஆனால், அந்த அடிப்படையில் எவருமே சிந்திக்கவில்லை. ஒரு வேளை அவ்வாறு பேச முன்பட்டால், முதலில் தமிழ் அரசியல்வாதிகள் பலர் சிக்கலுக்குள் அகப்பட்டுக்கொள்ள நேரிடும். கஜேந்திரகுமாரைத் தவிர வேறு எவருமே பேச முடியாத நிலைமை ஏற்படும். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தையிட்டி விவகாரம் அரசாங்கத்தினால் இலகுவாக கையாளக் கூடிய விடயமல்ல - ஒரு வேளை மாற்றுக் காணி என்னும் விடயத்தை முன்வைத்தால் அது சாத்தியப்படக் கூடும். அவ்வாறில்லாது அரசியலில் இருக்கின்றோம் என்பதை காண்பிப்பதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துவது மட்டும்தான் நோக்கமென்றால் அதற்கு இது போன்ற விடயங்கள் ஒரு குறிப்பிட்டளவில் பயன்படக்கூடும்.

## கூரை மழைநீர் சேகரிப்பு திட்டம் கைதடியில் நேற்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

கனேடிய தூதரகத்தின் நிதிப்பங்களிப்பில் கைதடியில் கூரை மழைநீர் சேகரிப்பு திட்டம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில், பாடசாலையின் அதிபர் கிறிஸ்மி சுஜீவா வித்யாசங்கரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்,

விருந்தினர்களாக இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வோல்ஸ் , கனேடிய அரசியல் ஆலோசகர் சாகிர்த்தியன் ஆகியோர் கலந்துகொண்டனர். முதலில் விருந்தினர்களின் வரவேற்கப்பட்டு, மழைநீர் சேகரிப்பு தொட்டி இடத்தில் நிறுவப்பட்ட பெயர்ப் பலகையை கனேடிய தூதுவர் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நவீல்ட் பாடசாலை மாணவர்களின் மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் செவிப்புலன் இழந்தவர்களுக்கான கருவிகளும் வழங்க வைக்கப்பட்டன. நிகழ்வில் நவீல்ட் பாட சாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூலகத்தை திறந்து வைத்தார் ஹரிணி

யாழ்ப்பாணம், பெப். 16

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பிரதமர் புனரமைக்கப்பட்ட நூலகம் பிரதமர் ஹரிணி அமரசூரியவினால், நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இதில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீபவானந்தராஜா, றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்,

ஆசிரியர் கலாசாலை அதிபர் லலீசன் மற்றும் கல்வு திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். (அ)



## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

அநுராதபுரம், பெப்.16

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று சனிக்கிழமை மரக்கறிகளின் விலைகள் அதிகரித்து காணப்பட்டன.

இங்கு ஒரு கிலோ கரட் 1,000 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டது. மேலும், ஒரு கிலோ பாகற்காய் 450 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ கத்தரிக்காய் 350 ரூபாய் முதல் 400 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ பீர்க்கங்காய் 250 ரூபாய் முதல் 300 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டன. (எ)

## தேசிய மக்கள் சக்தி அரசை எதிர்க்கட்சிகள் வெல்லமுடியாது

### பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க

கொழும்பு, பெப். 16

எதிர்க்கட்சிகளால் தேசிய மக்கள் சக்தியினரை வெற்றி கொள்ள முடியாது என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார்.


கொழும்பு கோட்டைப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றங்கள் பலப்படுத்தப்படவேண்டும். ஆனால் எதிர்க்கட்சிகள் தேர்தலை எதிர்கொள்வதற்கு அஞ்சுகின்றன. அதன் காரணமாக தேர்தலைப் பிற்போடுமவதற்கு ஏதுவான நகர்வுகளை எதிர்க்கட்சிகள் மேற்கொள்கின்றன.

நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு தேர்தலுக்குச்செல்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதே போன்று கேலிக்குள்ளான வகையில் எதிர்க்கட்சிகள் கூட்டணிகள் அமைப்பதை அவதானிக்க முடிகின்றது. ரணிலை விமர்சித்த சஜித் தற்போது அவருக்கு புகழாரம் சூட்டுகின்றார். இத்தகைய பின்னணியில் தேசிய மக்கள் சக்தியினரை இவர்களால் வெற்றி கொள்ள முடியாது - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சான்றின் வழி வாழ்வோம்



- முனைவர் என். பத்ரி

'மனிதனின் துன்பத்துக்குக் காரணம், அவனது ஆசையே" என்றார் புத்தர். மனிதன் படிக்கும் திறன் பெற்றிருப்பதால் அறிவைப் பெறுகிறான். தன் அனுபவத்தால் பட்டறிவையும் பெறுகிறான். எனவே, அன்றாட நிகழ்வுகளில் எது நல்லது, எது கெட்டது என பிரித்தறியும் திறனையும் பெறுகிறான். ஆறறிவு பெற்ற அவனுக்கு மட்டுமே, அறவழியிலும், அறமற்றவழியிலும் வாழத் தெரியும். அவன் தன் படிப்பறிவாலும், பட்டறிவாலும் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளை வளர்த்துக் கொள்கிறான். அதை நோக்கி பயணிக்கவும் செய்கிறான்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்னும் சொல்லாடலும் நம்மிடையே வழக்கில் உள்ளது. மகாபாரதத்தில் பாண்டவர் நல்லவர்களாக விளங்கினர். அவரது சொல்லும் செயலும் ஒன்றாகவே இருந்தன. ஆனால், கௌரவர்கள் பொறாமை, வஞ்சம், சூழ்ச்சி ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்கினர். எண்ணம், சொல், செயலில் தீயவர்களாக இருந்தனர். அதனால் தான் நல்லவர்களாக இருந்த பாண்டவர்கள் பாரதப் போரில் வெற்றி பெற்றனர்.

நம் மனச்சான்று நல்லவை எல்லாம் அறம் என்பதையும், தீயவையெல்லாம் அறமற்றவை என்பதையும் பொதுவாக ஒப்புக்கொள்கிறது. ஆனால், நம் ஒவ்வொருவருக்கும் வாழ்வில் வெவ்வேறு அறம் சார்ந்த கோட்பாடுகள் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், நம் வாழ்வை சிக்கலில்லாமல் வாழ நமக்குப் பணம் தேவைப்படுகிறது. அதற்காக செய்யும் அறமற்ற செயல்களையும் நம் மனச்சான்று அறமுள்ள செயல்களாகவே பார்க்கிறது.

இதன் காரணமாகத்தான் சமூகத்தில் குற்றங்கள் பெருகி வருகின்றன. குற்ற வாளிகளின் பணபலத்திற்கு சட்டத்தின் ஓட்டைகள் துணைபோகின்றன. நீதிமன்றங்கள் அறத்தின் பக்கம் இருந்தாலும், குற்றம் சுமத்தப்பட்டவர்தான் குற்றத்தைச் செய்தார் என்பதை நிரூபிப்பதற்குச் சாட்சிகள் தேவைப்படுகின்றன.

'நான் என் வாழ்வில் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்ததில்லை. என் மனமறிந்தவரை அறவழியில் தான் செயலாற்றுகின்றேன். எனினும் துன்பப்படுகிறேன்" என்று நம்மில் பலர் வருத்தப்படுவதுண்டு. இப்படி ஓர் எண்ணம் தோன்றினால் இதுதான் நாம் நமது செயலை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய சரியான தருணம்.

சூதாடுதல் தவறு என்பது உலகுக்கே பொதுவான அறம். ஆனால் மகாபாரதத்தில் தருமரோ, கௌரவர் நட்புடன்அழைப்பதால் சூதாடலாமெனக் கொண்ட அறத்தின் காரணமாக, நாடு உட்பட அனைத்தையும் பணயம் வைத்து சூதாடித் தோற்கிறார். இதுபோல் துரியோதனனும் சகுனியும் கூட அவர்தம் அறமல்லாத செயலுக்கு ஆயிரம் நியாயமான காரணங்களைச் சொல்ல முன் வரலாம்.

நம்மில் பலர் துன்பப்படுவதற்குக் காரணம், நாம் பொதுவெளிகளிலும், குடும்பங்களிலும் நடைபெறும் அநியாயங்களுக்கு எதிராக சிறு எதிர்ப்பைக் கூட காட்டாமல், மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூட இருக்கலாம்.

பொதுவாக, ஒவ்வொரு குற்றத்துக்குப் பின்னணியிலும் பல நியாயங்கள் சொல்லப்படுவதுண்டு. இதுவே நியாயம் எனக் கருதிப் பல அநியாயங்கள் நடப்பதுமுண்டு. இந்த இடத்தில் நேர்மையாகச் சிந்தித் தால், அறம் ஆளுக் கேற்றாற் போல் மாறுவது தவறே ஆகும். அறம் என்பதற்கு நம் அனைவரின் மனச் சான்றும் ஒரே வடிவத்தைக் கொடுப்பது தான் சரி என்றே தோன்றுகிறது. நம் மனச்சான்று, தவறான ஒன்றை சரியானது என்று ஒரு போதும் சொல்லாது. திருடுவது தவறு என்பது திருடனுக்குத் தெரிகிறது. அதனால்தான் யாருக்கும் தெரியாமல் திருடுகிறான். காவல் துறையிடமிருந்து தப்பிக்க முயல்கிறான்.

மனச்சான்றின் வழியில் வாழ்ந்தால்தான் அறம் தழைக்கும். நம் வாழ்வு சிறக்கும். நல்லறத்தின் வாழ்வின் விளைவாக உலகில் நன்மைகள் மட்டுமே நிறையும்.

பிறருக்கு ஒரு சிறு தீங்கைக் கூட ஏற்படுத்தாத நம் நல்ல எண்ணம், சொல், செயல் மட்டுமே அறமாகும். அத்தகைய வலிமை வாய்ந்த அறத்தின் வழியில் நாம் வாழும்போது, நமக்கு நன்மையே ஏற்படும். ஆனால், நன்மை ஏற்பட தாமதமாகலாம். இதைப் பற்றி வருந்தக் கூடாது. நம் செயலில் எது அறம், எது அறமல்லாதது என அவ்வப்போது தற்சோதனை செய்து பார்ப்பது நல்லது. இது நாம் எங்கே நாம் தவறிழைத்தோம் என்பதை நமக்கு தெளிவாக உணர்த்தும்.

அறிந்தோ, அறியாமலோ தவறிழைத்தலை மனித சமுதாயம் இயல்பாகக் கொண்டிருக்கிறது. இதுதான் நடப்பியலும் கூட. இச்சூழலில் இத்தகைய அறக் கொள்கையோடு நாம் வாழ்வது சாத்தியமா என்ற கவலையும் தோன்றுகிறது. ஆனால் அறம் சார்ந்த வாழ்க்கையை மட்டுமே மனச்சான்றின் வழியில் வாழவேண்டும் என்பதை, நாம்தான் முடிவு செய்ய வேண்டும். •

## இந்தவார ராசிபலன் 16.02.2025 - 22.02.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - மாசி 04

நல்ல நேரம்: 09.33 - 11.03 ராகு காலம் : 05.03 - 06.33 திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் தங்கள் சந்தோஷ தருணங்களை குடும்பத்தாரோடு கழித்து மகிழ்வீர்கள். அதன் காரணமாக குடும்பத்தில் குதூகலம் நிலவும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் கோலாகலமாக நிறைவேறும். கடைசியில் விருந்து. கேளிக்கைகளில் மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்வீர்கள்.. நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும்

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். முன்பின் தெரியாதவர்கள் கூட உங்களுக்கு உதவ முன் வருவார்கள். மேடைப் பேச்சாளர்கள் அவர்களின் பேச்சு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். புதிய வியாபார தொடர்புகள் மூலம் இலாபம் அதிகரிக்கும். உங்கள் பணி உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும். பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள். வருவாய் ஓரளவு அதிகரிக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்களின் தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். ஓய்வெடுத்து. உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக. நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. எனவே. கஷ்டங்கள் வந்தாலும் கலங்காதீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரம் பயணங்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். சீரான பொருளாதார நிலையில், மனதிற்குப் பிடித்தபடி மனை. வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று. அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். வீடு. மனை ஆகியவை கிடைக்கும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சுபகாரியங்களுக்கு வீடே விழாக் கோலம் பூணும். சந்ததி விருத்தி ஏற்படும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும். மகிழ்ச்சியும் ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு. மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். சுற்றமும். நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். ஆயினும் முயற்சிகள் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். சிலருக்கு உறவுகள். நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அரசு பணிபுரியும் பெண்கள் இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும். பாராட்டுதல்களும் குவியும். வெளியூர்ப் பயணங்கள். வெற்றிகரமாகவும். இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க. மங்கல காரியங்கள் ஈடேறும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமார் 30 ஆயிரம் கோடி மின் திட்டத்தை அதானி நிறுவனம் கைவிட்டது ஏன்?

- ரஞ்சன் அருண் பிரசாத்





இலங்கையின் மன்னார் பகுதியில் முன்னெடுக்கப்பட இருந்த காற்றாலை மின்சார திட்டத்தைக் கைவிட அதானி நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதன் பின்னணியில், இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய மற்றும் இலங்கை தரப்பினர் இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்த தீர்மானித்துள்ளனர்.

மன்னாரில் முன்னெடுக்க திட்டமிடப்பட்ட காற்றாலை மின்சார திட்டத்தைக் கைவிட தீர்மானித்துள்ளதாக இந்தியாவின் அதானி நிறுவனம் அறிக்கையொன்றின் ஊடாக அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திலிருந்து வெளியேறவுள்ளதாக இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜீன் ஹேரத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தினால் இந்தத் திட்டத்தை மீள் ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால் இந்தத் திட்டத்தில் இருந்து வெளியேறத் தீர்மானித்ததாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியில் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் (30 ஆயிரம் கோடி) முதலீட்டில் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

மன்னார் காற்றாலை மின்சார திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பல அனுமதிகள் கிடைத்துள்ளபோதிலும், சுற்றாடல் ஆய்வு அறிக்கை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அதானி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினால், இந்த அறிக்கை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, திட்டத்தில் இருந்து வெளியேறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் குறித்து அரசாங்கத் தரப்புடன் கடந்த இரண்டு வருட காலமாக கலந்துரையாடல்களை நடத்தியிருந்ததாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 484 மெகாவாட் திட்டமாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவுடன் 14 தடவைக்கும் அதிகமான கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை, வரிவிலக்குக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட அனுமதிகளைப் பெற்றுக் கொள்கின்றமை தொடர்பில் அனைத்து விடயங்களும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளதாக அதானி கிரீன் நிறுவனத்தின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் காற்றாலை மின்சார திட்டம் தொடர்பான கட்டமைப்பு உள்ளிட்ட முன்னோடி நடவடிக்கைகளுக்காக 5 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அண்மித்த தொகை செலவிடப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தமது நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழு அதிகாரிகள் மின்சக்தி அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியதாகவும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த உத்தேச திட்ட யோசனை தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழு மற்றும் திட்டக் குழு மீண்டும் நியமிக்கப்பட்டமையினால், இலங்கையின் சுயாதீன உரிமைக்கு மதிப்பளித்து அந்தத் திட்டத்தில் இருந்து வெளியேற தமது நிறுவனத்தின் பணிப்பாளர் குழு தீர்மானித்துள்ளதாக அதானி நிறுவனம் குறிப்பிடுகின்றது.

தமது நிறுவனம் எப்போதும் இலங்கைக்காக நிற்கும் என்றும், மீண்டும் அபிவிருத்தி வாய்ப்புக்காக இலங்கை அரசாங்கம் விடுக்கும் அழைப்பை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் நிறுவனத்தின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதானி கிரீன் நிறுவனம், மன்னார் காற்றாலை மின்சார திட்டத்தில் இருந்து வெளியேறுகின்றமை தொடர்பில் இதுவரை மின்வலு அமைச்சுக்கு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை என அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.டி.எம். உதயங்க ஹேமபால தெரிவிக்கின்றார்.

"எமக்கு இதுவரை அறிவிக்கவில்லை. அதானி நிறுவனம் முதலீட்டு சபைக்கு இந்த அறிவிப்பை அனுப்பியுள்ளது. நானும் அந்தக் கடிதத்தைக் கண்டேன். அது முதலீட்டு சபைக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம். முதலீட்டு சபையினால் எமக்கு அறிவிக்கப்பட வேண்டும். இல்லையென்றால், அந்த நிறுவனத்தினால் எமக்கு அறிவிக்கப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பில் அதிகாரப்பூர்வமாக எதையும் கூற முடியாது" என்று அமைச்சின் செயலாளர் கூறுகின்றார்.

மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் 500 மெகாவாட் காற்றாலை மின்சார திட்டத்தை முன்னெடுக்க அதானி நிறுனம் இலங்கை அரசாங்கத்துடன் கையெழுத்திட்டுள்ளது.

மேலும், கொழும்பு துறைமுக நகர் கொள்கலன் முனையத்தை ஒன்றிணைந்த வகையில் அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்துடன் அதானி நிறுவனம் 2021ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி கையெழுத்திட்டது.

இந்தத் திட்டத்தின் ஊடாக 51 சதவீத பங்குகள் அதானி நிறுவனத்திற்கு கிடைக்கப் பெறவுள்ளன. அதானி நிறுவனத்தின் இலங்கை முகவரான ஜோன் கீல்ஸ் நிறுவனத்திற்கு 34 சதவீத பங்குகளும், இலங்கை துறைமுக அதிகார சபைக்கு 15 சதவீத பங்குகளும் உரித்தாகின்றன.

இந்தத் திட்டத்திற்காக 700 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்யப்படவுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையில் முந்தைய ஆட்சியாளர்களால் அதானி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் புதிய அரசாங்கம் பதவியேற்ற பிறகு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

## அதானி மின் திட்டத்திற்கு எழுந்த எதிர்ப்புகள்

அதானி நிறுவனத்தினால் இலங்கையில் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்ட காற்றாலை திட்டத்திற்குக் கடும் எதிர்ப்புகள் எழுந்தன.

குறிப்பாக மன்னார் பகுதியில் உத்தேசிக்கப்பட்ட திட்டத்திற்கே இவ்வாறு எதிர்ப்புகள் எழுந்திருந்தன. வலசைப் பறவைகளின் வருகைக்கு இந்தத் திட்டத்தின் ஊடாகப் பாரிய பாதிப்புகள் ஏற்படுவதாக சூழலியலாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

மன்னார் வழியாகவே இந்த வலசைப் பறவைகள் நாட்டிற்குள் வருகை தருவதாகக் கூறப்படுகின்றது. 30 நாடுகளைச் சேர்ந்த பறவைகள் இலங்கைக்குள் வருகை தருவதுடன், ஓராண்டுக்கு சுமார் 15 மில்லியன் பறவைகள் வருவதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன், மன்னார் கரையோரப் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மீனவர்கள் குறிப்பிட்டனர்.

இதுகுறித்து பேசிய போது, எந்தவொரு காரணத்திற்காகவும் காற்றாலை மின்சார திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் அமைக்க இடமளிக்க மாட்டோம் என்று கூறினார் மன்னார் மாவட்ட மீனவ சங்கத்தின் தலைவர் ராஜா குரூஸ்.

காற்றாலை திட்டத்தினால் மக்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்படுகின்றமையினால், இந்த திட்டத்திற்கு தாம் எதிர்ப்பை வெளியிடுவதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவரான அருட்தந்தை சந்தியோ மார்கஸ், சில மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

"இலங்கை அரசாங்கத்தினால் ஏற்கனவே 30 காற்றாலைகள் பொருத்தப்பட்டுள்ளன. அது பல்வேறு பாதிப்புகளை மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ளது. மக்கள் எதிர்நோக்கிய சிரமங்களை அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளோம். அதனை நிவர்த்தி செய்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கு பின்னர் காற்றாலை மின் திட்டத்தை அமல்படுத்தக்கூடாது என கேட்டுக்கொண்டுள்ளோம்." என்று அவர் தெரிவித்தார்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மட்ட அரசியல் மாற்றங்களின் விளைவான வெற்றிடத்தை நிரப்புதல்



கலாநிதி ஜெகான் பெரேரா

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்த புதிய வழிவகைகளை கண்டறிவதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்கிறது. டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான தேவையும் அதில் அடங்கும். இந்த நோக்கத்துக்காக பெரும் எண்ணிக்கையான இலங்கை நிபுணர்களை அணிதிரட்டியிருப்பது குறித்து அரசாங்கம் பெருமைப்படுகிறது.

மொபைல் தொடர்பு வழங்குநராக டயலொக்கை ஒவ்வொரு வீட்டிலும் பேசுபொருளாக்கிய கலாநிதி ஹான்ஸ் விஜயசூரியவை டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான தனது பிரதம ஆலோசகராக ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க நியமித்திருக்கிறார். இது தொடர்பில் இலங்கையின் திட்டங்கள் குறித்த ஒரு சுருக்கமான விளக்கத்தை விஜயசூரிய கொழும்பில் நடைபெற்ற பிம்ஸ்ரெக் டிஜிட்டல் சங்கமம் 2025 இல் 'சகலருக்கும் பொதுவான சுபிட்சத்துக்கான பொது டிஜிட்டல் உட்கட்டமைப்பை கட்டியெழுப்புதல்' என்ற தலைப்பிலான மகாநாட்டில் அளித்தார்.


பிம்ஸ்ரெக் (BIMSTEC - Bay of Bengal initiative for Multi - Sectoral Technical and Economic Cooperation ) என்பது வங்காள விரிகுடா பிராந்தியத்தில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தியாவின் தலைமையில் ஏழு தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு பிராந்திய அமைப்பாகும். பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் அதில் அங்கம் வகிக்கின்றன.

சர்வதேச ஆதரவை அணிதிரட்டுவதை நோக்கமாகக் கொண்ட சீனாவின் மண்டலமும் பாதையும் செயற்திட்டம் போன்ற ஏனைய பிராந்திய முயற்சிகளை மனதிற்கொண்டு இந்தியா பிம்ஸ்ரெக்கை பிராந்திய ஒத்துழைப்புக்கான ஒரு முக்கிய மேடையாக மேம்படுத்துகிறது. தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்தியா கொண்டிருக்கும் 'முதலில் அயலகம்' மற்றும் கிழக்கு நோக்கிய செயற்பாடு போன்ற கொள்கைகளுடன் பிம்ஸ்ரெக் இசைவானதாக அமைகிறது. பிம்ஸ்ரெக் ஒத்துழைப்பு கட்டமைப்பின் கீழ் பயங்கரவாத எதிர்ப்பு, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் இணையவெளிப் பாதுகாப்பு ஆகியவை தொடர்பிலான முயற்சிகளுக்கு இந்தியா தலைமை தாங்கி வழிநடத்துகிறது.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் விளைவாக சர்வதேச மகாநாடுகளை நடத்துவது இலங்கைக்கு கட்டுப்படியாகாததாக இருக்கின்ற ஒரு நேரத்தில் இலங்கையில் இந்த மகாநாடு நடைபெற்றிருக்கிறது என்பதே அதன் முக்கியத்துவமாகும். இந்தியாவின் நல்லெண்ணம் மற்றும் நிதியுதவியின் விளைவாகவே பல அயல்நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களும் கொள்கை வகுப்பாளர்களும் இலங்கைக்கு விஜயம் செய்யக்கூடியதாக இருந்தது.

டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு, டிஜிட்டல் அடையாளம், டிஜிட்டல் கொடுப்பனவு, வர்த்தகத்தை டிஜிட்டல் முறைக்கு மாற்றுதல் மற்றும் டிஜிட்டல் ஆட்சிமுறை ஆகியவை மகாநாட்டில் ஆராயப்பட்ட முக்கியமான விடயதானங்களாகும். டிஜிட்டல் மயமாக்கத்தினால் பொருளாதார செயற்திறனை மேம்படுத்தவும் ஊழலைக் குறைக்கவும் முடியும் என்பது அதன் அம்சங்களில் முக்கியமானதாகும். டிஜிட்டல் மயமாக்கத்தின் இந்த அம்சத்துக்கு பிரதியமைச்சர் சத்துரங்க அபேசிங்க தனதுரையில் பெருமுக்கியத்துவம் கொடுத்தார். ஊழல் ஒழிப்பில் அரசாங்கம் கொண்டிருக்கும் பற்றுறுதியை அவர் அழுத்தியுரைத்தார்.

இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் விரிவாக்கத்துக்கும் வலுப்படுத்தலுக்கும் ஆதரவளிப்பதில் இந்தியா வகிக்கும் பாத்திரம், கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற வளங்களை பெருமளவுக்கு பயனுறுதியுடைய முறையில் பயன்படுத்துதல் மற்றும் அறிவுஜீவித்துவ வளங்களை அதிகரித்தல் ஊடாக நாட்டின் அபிவிருத்தி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு முக்கியமான ஒரு வாய்ப்பை வழங்குகிறது. துரிதமாக வளரும் டிஜிட்டல் உட்கட்டமைப்புடன் கூடிய ஒரு பிராந்திய வல்லாதிக்க நாடு என்ற வகையில் இந்தியா, இலங்கையின் டிஜிட்டல் மாற்றத்தில் ஒரு வகைமாதிரியாகவும் முக்கியமான ஒரு பங்காளியாகவும் செயற்பட முடியும்.



**தொலைவில் இருக்கின்ற ஒரு தீவு என்ற வகையில் அமெரிக்க அரசாங்கத்தின் முன்னுரிமைப் பட்டியலில் இலங்கை ஒரு உயர்ந்த இடத்தைப் பெறுவது சாத்தியமேயில்லை. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை, இலங்கை உயர்ந்த முன்னுரிமைக்குரியதாகவே இருக்கும். அதனால், இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதில் இந்தியா மீண்டும் அக்கறை காட்டக்கூடிய சூழ்நிலை உருவாகவும் கூடும்**

டிஜிட்டல்மயமாக்கத்தில் முன்னரங்கத்தில் இருக்கும் இந்தியா துரித தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் டிஜிட்டல் நிதிமுறைமை ஊடாக உலகின் முன்னணி பொருளாதார நாடுகள் மத்தியில் ஒரு இடத்தைப் பிடித்திருக்கிறது என்று பிம்ஸ்ரெக் செயலகத்தின் தற்போதைய பணிப்பாளரான கலாநிதி சாய் மெண்டிஸ் சுட்டிக்காட்டினார்.

உலக அரங்கு பெருமளவுக்கு பிராந்திய அணிகளாகவும் தங்களது சொந்த மூலோபாய நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் முக்கியமான வல்லாதிக்க நாடுகளினால் ஆதிக்கம் செலுத்தப்படுவதாகவும் விளங்குகின்ற ஒரு யுகத்தில், அயல்நாடான இந்தியாவுடன் நல்லிணக்க உறவை ஆழமாக்குவதே இலங்கைக்கு நடைமுறைச் சாத்திரமானதும் பயனுடையதுமாகும்.

2022 இலங்கையின் பொருளாதார நெருக்கடியின்போது இது தெளிவாக வெளிக்காட்டப்பட்டது.

அந்த நேரத்தில் இலங்கைக்கு பெருமளவு நிதியுதவியை வழங்கிய தனியொரு முக்கியமான நாடாக இந்தியா விளங்கியது. இந்தியா வழங்கிய நேரடி வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தின் ஊடாக எரிபொருட்கள், உணவு வகைகள் மற்றும் மருந்து வகைகள் போன்ற முக்கியமான இறக்குமதிகளைச் செய்யக்கூடியதாக இருந்தது. சிறிய நாடுகள் ஒதுக்கப்படுகின்ற அல்லது அலட்சியம் செய்யப்படுகின்ற ஒரு புவிசார் அரசியல் பின்புலத்தில் அத்தகைய உதவியும் ஆதரவும் பெறுமதி மதிப்பிட முடியாதவையாகும். இலங்கையின் பிராந்திய பங்காளி என்ற வகையில் இந்தியாவின் பாத்திரம் எதிர்காலத்தில் அதனுடனான நெருக்கமான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் தேவையை வலுவாக உணர்த்தி நிற்கிறது.

இலங்கை தொடர்பான உறவுகளைப் பொறுத்தவரை, இந்தியா அதன் கொள்கைகளை இனத்துவ மற்றும் கலாசாரப் பிணைப்புகளுடன் சம்பந்தப்பட்டவை என்ற நிலையில் இருந்து பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்டவையாக மாற்றியிருக்கிறது என்பதற்கான அறிகுறிகளை அண்மைக்காலத்தில் காணக்கூடியதாக இருந்தது. இலங்கையின் இனநெருக்கடியில் இந்தியாவின் பாத்திரம் தொடர்பான கடந்த காலச் சர்ச்சைகளை பின்னோக்கிப் பார்க்கும்போது இந்தியாவின் கொள்கைகளில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றத்தை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

கடந்த டிசம்பர் மாதம் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இது தெளிவாகத் தெரிந்தது. இரு நாடுகளும் வெளியிட்ட கூட்டறிக்கை இருநாடுகளும் செய்துகொண்ட அல்லது விரைவில் செய்து கொள்வதற்கு உறுதிபூண்டிருக்கும் வர்த்தக மற்றும் பொருளாதார உடன்படிக்கைகள் மீதே முக்கிய கவனத்தைக் குவித்திருந்தன.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் மூலோபாய முக்கியத்துவ அமைவிடம் தொடர்பி லான பாதுகாப்பு அம்சங்களும் கூட்ட றிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால், அதில் சமாதானத்தைக் கட்டி யெழுப்புதல் மற்றும் இலங்கையின் இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன் றைக் காண்பது பற்றி எதுவும் குறிப்பி டப்படவில்லை என்பது கவனிக் கத்தக்கது.

சீனா இலங்கையில் அதன் பிரசன்னத்தை உறுதிப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக மேற்கொள்கின்ற முயற்சிகள் மீதே இந்தியா அக்கறையைச் செலுத்துகிறது. தனது பாதுகாப்புக்கு முக்கியமானதாக தெற்காசியாவையும் இந்து சமுத்திரத்தையும் இந்தியா கருதுகின்றது. அந்த பிராந்தியங்களில் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான சீனாவின் பரந்தளவிலான மூலோபாயத்தின் ஒரு அங்கமாகவே இலங்கையில் பிரசன்னத்தை உறுதிப்படுத்துவதற்கு சீனா மேற்கொள்ளும் தொடர்ச்சியான முயற்சிகளை புதுடில்லி நோக்குகிறது. அந்த முயற்சிகள் மீதே இந்தியாவின் கவனம் குவிந்திருக்கிறது.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் குறித்தோ அல்லது இலங்கையில் இனத்துவ சமூகங்களுக்கு இடையில் ஓரளவுக்கேனும் அதிகாரப் பரவலாக்கத்தை உறுதிசெய்வதற்கு மாகாண சபை தேர்தல்களை நடத்துவதுவது குறித்தோ எதுவும் குறிப்பிடப்படாதமை முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய அம்சங்களில் ஒன்றாகும். 1987 ஆம் ஆண்டில் இந்தியாவும் இலங்கையும் கைச்சாத்திட்ட சமாதான உடன்படிக்கையின் ஒரு விளைவே 13 ஆவது திருத்தமாகும். அந்த உடன்படிக்கையின் ஊடாகவே இலங்கையின் நீண்டகால இனநெருக்கடிக்கு தீர்வொன்றைக் காண்பதற்காக இலங்கையில் ஆட்சிமுறையில் செல்வாக்கைச் செலுத்துவதற்கு இந்தியா முயன்றது .

பெரும்பான்மைச் சமூகத்துடன் ஒப்பிடும்போது சனத்தொகையில் சிறியதான தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை, தேசிய அல்லது உபதேசிய தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளில் பங்காளிகளாக இருப்பதில் அதற்கு இருந்த இயலாமையே இனநெருக்கடியின் மூலவேராகும். இலங்கை அரசாங்கத்தின் மீது நெருக்குதலைப் பிரயோகிக்க இந்தியா தவறுவதால் தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் அதிகாரப்பரவலாக்கத்துடன் கூடிய தங்களது சுயாட்சிக்கான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் பயனற்றுப்போகிறது என்று தமிழ் அரசியல் கட்சிகள் கவலையடைந்திருக்கின்றன.


நீண்டகாலமாக தீர்த்துவைக்கப்படாமல் இருக்கும் இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் மீதான வெளி நெருக்குதல் அமெரிக்காவில் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பதை அடுத்து தற்போது அமெரிக்க கொள்கைகளில் ஏற்பட்டுவருகின்ற தீவிரமான மாற்றங்களை தொடர்ந்து மேலும் தணிந்து போவதற்கான சாத்தியமே இருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகுவதற்கு அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அரசியல் சீர்திருத்தங்களின் ஊடாக போர்க்கால உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறவும்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காட்டான்

# சட்ட நடவடிக்கை எடுக்காதவரை ‘முடிந்தால் கைது செய்து பார்’! நடவடிக்கை எடுத்துவிட்டால் ‘இது அரசியல் பழிவாங்கல்’!



கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்திய மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதிக்கு இதய வணக்கத்தை அர்ப்பணித்து இன்றைய பத்தியை ஆரம்பிப்பதே முறைமையாகும்.

1984ன் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் ஈழமுரசு தினசரி ஆரம்பிக்கப்பட்ட போது அதில் பயிற்சி ஊடகராக முதற் சுழி போட்டு, 1986ல் பிரசவமான முரசொலி தினசரியில் பிரகாசமான ஊடகராக மிளிர்ந்து இரண்டு பத்திரிகைகளினதும் பிரதம ஆசிரியரின் பாசறையில் புடம்போட்ட முன்னணி ஊடகரானவர் திரு. பாரதி.

1990களில் கொழும்பு சென்று அங்கு இரண்டு பத்திரிகைகளில் தினசரி, மற்றும் வாரமலர் பத்திரிகைகளில் தலைமைப் பதவியை ஏற்று சிறப்பாகப் பணிபுரிந்தபின் தாய்மண் திரும்பிய பாரதி, சிறிது கால ஓய்வின் பின்னர் மீண்டும் பத்திரிகைப் பணியில் கால் வைத்த வேளையில் - தமது 62வது வயதில் மறைந்தது எவரும் எதிர்பாராதது.

இராஜநாயகம் பாரதி நல்லதொரு பண்பான பத்திரிகையாளர். தமிழ்த் தேசியத்தை வேஷமாக்காது இறுதிவரை நேசித்தவர். எவரது மனதும் புண்படாத வகையில் அரசியல் மற்றும் பொருளாதார பக்கங்களில் தன்னை இணைத்துக் கொண்டு எல்லோருக்கும் பொதுவானவராக வாழ்ந்தவர் என்பதை அவரது இறுதிச் சடங்கில் பங்குபற்றிய ஊடகர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுச் சேவையாளர்கள் சுமார் இரண்டு மணி நேரம் நிகழ்த்திய இரங்கல் உரைகளூடாக நிரூபணமாகியது.

இரண்டு தசாப்தங்களாக தலைநகர் பத்திரிகைகளில் பணியாற்றி பன்மொழி ஊடகர்களுடன் நெருங்கிப் பழகியதோடு தமிழ் ஊடக ஒன்றியத்தினை உருவாக்கி அதன் தலைவராகவும் இயங்கிய பாரதியின் இறப்புப் பற்றி, அங்குள்ள ஆங்கில சிங்கள ஊடகங்கள் எதுவுமே குறிப்பிடாது மௌனம் காத்தது ஏன் என்ற கேள்விக்கு ஒரு சொல்லில் பதில் சொல்லலாம்.


இதுதான் எக்கராஜ்ய என்பதுக்குள்ளான இனஒற்றுமை, பாகுபாடின்மை, சமத்துவம் என்பதை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்கள் வாழ வேண்டுமென்று கூறி வருபவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

தமிழரசுக் கட்சியை உருவாக்கிய தந்தை செல்வாவை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்த, தமிழரசின் கடந்த பத்து வருடகால தலைவராகவிருந்த மாவை சேனாதிராஜா பிறந்த மாவிட்டபுரத்தை உள்ளடக்கிய காங்கேசன்துறையின் தையிட்டி கடந்த சில நாட்களாக போராடியது. இங்கு குடியிருந்தவர்களின் காணிகளை அடாத்தாக எடுத்த சிங்கள இராணுவம் அங்கு நிறுவிய பாரிய திஸ்ஸ விகாரையே இதற்குக் காரணம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையில் இதற்கான எதிர்ப்புப் பேரணி முன்னைய காலங்களைவிட இம்முறை வேகமாக முன்னெடுக்கப்பட்டது. அதேசமயம், ஏற்றுக் கொள்ள முடியாத பலரது கருத்துகளையும் கேட்க முடிந்தது. விகாரை அமைந்துள்ள பெருநிலப்பரப்பு பௌத்த சங்கத்துக்கு சொந்தமானது என்ற அறிக்கையும் எங்கிருந்தோ வந்தது. இனவாதத்தில் தோய்ந்த முன்னாள் கடற்படை அதிகாரியான சரத் வீரசேகரவுக்கு இவ்விவகாரம் அவல் கிடைத்தது போன்றிருந்தது.

எதனை எங்கே பேசுவது என்று தெரியாத சில தமிழ்த் தலைவர்கள் திஸ்ஸ விகாரையை இடிக்க வேண்டுமெனக் கூறி தெற்கின் இனவாதிகளுக்கு தீப்பந்தத்தைக் கொடுத்தனர். கடந்த சில வருடங்களாக முக்காடுக்குள் முடங்கிக் கிடக்கும் சிங்கள இனவாதிகள் இதனைக் கையில் எடுத்திருந்தால் எவ்வகையான களேபரம் ஏற்பட்டிருக்குமென்பதை சிந்திக்காது உரையாற்றியதைத் தவிர்த்திருக்கலாம்.

**சொத்து மற்றும் நிதி மோசடி தொடர்பாக மகிந்தவின் இரண்டாவது மகன் யோசித மற்றும் அவரது பாட்டி மீது வழக்குத் தாக்கலாகியுள்ளது. மகிந்தவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ச சட்டத்தரணி பரீட்சையில் மோசடி செய்த குற்றச்சாட்டில் உயர்மட்ட விசாரணை ஆரம்பமாகியுள்ளது. நேற்றுவரை முடிந்தால் கைது செய் என்று ஆட்சித்தரப்புக்கு சவால் விட்ட நாமல், இன்று சட்டம் தங்கள் மீது பாய்வதைக் கண்டு அதனை அரசியல் பழிவாங்கல் என்கிறார். எப்போதுமே அரசியல் போர்வையை கழற்ற மறுப்பவர்களின் வாய்ப்பாடு இதுதான்.**



மக்களால் துரத்தியடிக்கப்பட்டு, கீழே வீழ்த்தப்பட்டு தலை தூக்கக் காத்திருக்கும் ராஜபக்சவினருக்கு பிராண வாயு ஊட்டி மீள் எழும்பச் செய்து தெற்கில் தமிழர் மீது இன்னொரு இன அழிப்பை ஏற்படுத்த ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததாக இது மாறலாம் என்பதை ஏனோ எமது தலைவர்கள் சிலர் மறந்து விட்டனர். விடுதலைப் புலிகள் காலத்தில் எந்தவொரு வழிபாட்டுத் தலமும் தாக்கப்படவில்லையென்பதையும், அனைத்துக்கும் தக்க பாதுகாப்பை அவர்கள் வழங்கியிருந்தார்கள் என்பதையும் அவர்களின் பெயரை தங்கள் தலையில் சுமந்து தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

ராஜபக்சக்கள் பற்றி இங்கு குறிப்பிடும்போது, இலங்கையின் தற்போதைய ஆட்சித்தரப்பு கடந்த இரண்டு தேர்தல்களிலும் தெரிவித்த மோசடிக் காரர் மீதான நடவடிக்கை பற்றி இப்போது சில செய்திகள் வருகின்றன. பதவியிலிருந்து துரத்தப்பட்ட கோதபாய இயலுமானவரை அமைதியை அனுஷ்டிக்கிறார். பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ச மீண்டும் நாடு திரும்பி அரசியலில் ஈடுபடப் போவதாக அவரது கூட்டத்தினர் தெரிவித்து வருகின்றனர். விரைவில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஒரு முட்டுக் கட்டை வந்துள்ளது.

உள்ளூரட்சி மன்ற தேர்தலுக்கான சட்டமூலம் நாட்டின் அரசமைப்புக்கு முரணானது என்றும் அதனை நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியமெனவும் மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதனால் இத்தேர்தல் மாகாண சபைத் தேர்தல் போன்று எப்போது இடம்பெறுமென்று நிச்சயித்துச் சொல்ல முடியாதுள்ளது.

சமவேளையில், பொதுஜன பெரமுனவிடமிருந்து பிரிந்து சென்று கடந்த இரண்டு தேர்தல் களிலும் ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்திருந்தவர்களை அழைத்து ஒரு கூட்டத்தை அண்மையில் மகிந்த நடத்தினார். பிரிந்தவர் கூடினர் என இந்தக் கூட்டத் துக்கு தலைப்பு வந்தது. மறுதரப்பில் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வெளியேறி தொடர் தோல்விகளைச் சந்தித்து வரும் சஜித் தலைமையிலான வர்களை ரணிலுடன் இணைக்கும் முயற்சியும் சாண் ஏற முழம் சறுக்கும் வகையில் ஏறி இறங்குகிறது. ரணில் ஒரு நரியன் - நம்ப முடியாது என்ற நிலைப்பாட்டில் சஜித் இன்னமும் உள்ளதால் இவர்களின் இணைப்பு கேள்விக்குறியாகவுள்ளது.

பெரமுனவினதும் - சஜித்தினதும் இணைப்பு முயற்சிகளை கவனித்த அநுர குமார, “பிரிந்திருந்த திருடர்கள் மீண்டும் இணைய முயற்சிக்கின்றனர்” என்று விளாசியுள்ளார். கள்வர்கள், கொள்ளையர்கள், மோசடிக்காரர்களை சட்டத்தின் முன் நிறுத்த தேர்தல் காலத்தில் சொன்னதுபோல நடவடிக்கை எடுக்கப் படும் நேரத்தில் அவர்கள் மீள இணைந்து மக்களை ஆட்சிக்கெதிராக திசை திருப்ப முனைகின்றனர் என்பது அநுரவின் எச்சரிக்கை.

அறகலய காலத்தில் தங்கள் வீடுகளும் சொத்துகளும் எரித்தும் தகர்த்தும் அழிக்கப்பட்டதாக பட்டியலிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நஷ்டஈடாக ரணில் தரப்பு அள்ளிக் கொடுத்த பில்லியன்கள் பற்றிய பட்டியல் இப்போது பகிரங்கமாகி யுள்ளது. இந்தப் பணத்தை மீளப் பெற வேண்டுமென்று பல சமூக அமைப்புகள் பகிரங்க வேண்டுகோள் விடுத்து வருகின்றன.

ஏற்கனவே கைதாகி விடுதலையான மகிந்தவின் இரண்டாவது மகன் யோசிதவும், அவரது பாட்டியான டெய்ஸி போரஸ்ட் விக்கிரமசிங்கவும் சொத்துக் குவிப்பு, நிதி மோசடி தொடர்பான வழக்குகளில் நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் ஏற்கனவே பயணத் தடையுடன் நீதிமன்றப் பிணையில் விடப்பட்டவர்கள்.

மகிந்தவின் மூத்த புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச 2011ம் ஆண்டு சட்டத்தரணியானது தொடர்பாக குற்ற விசாரணை ஆரம்பமாகியுள்ளது. உண்மையில் இது ஒரு பழைய விசயம். ஆனால் இப்போது மீண்டும் கிளறப்பட்டுள்ளது. அப்போது மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தமை யால், மகன் நாமலின் பாதுகாப்பு கருதி அவரை தனியொரு அறையில் சட்டக் கல்லூரி இறுதிப் பரீட்சை எழுத அனும திக்கப்பட்டது. அவ்வேளை வேறு இரு சட்டத்தரணிகள் அவருக்கு உதவி செய்து பரீட்சையில் சித்தி பெறச் செய்ததாக பல வருடங்கள் பெருமளவில் சொல்லப்பட்டு வந்தது. இப்போது அதிகாரபூர்வமாக விசாரணையை அவர் சந்திக்க நேர்ந்துள்ளது.


மகிந்த ராஜபக்ச சட்டத்தரணியாக சித்தியடைந்தது தொடர்பாகவும் ஒரு விடயம் அன்றிலிருந்து பேசப்பட்டு வருகிறது. 1970ல் இவர் நாடாளுமன்ற உறுப்பினரானார். அப்போது இவர் சட்டத்தரணியல்ல. சிறிமாவோ ஆட்சியில் நீதி அமைச்சராகவிருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டக்கல்வியை பெறுவதற்கு ஒரு சலுகையை அறிவித்தார். இதன் பிரகாரம், ஜி.சி.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திராவிட்டாலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சட்டக்கல்லூரிக்கு அனுமதி பெற்று சட்டத்தரணியாக இது வழிவகுத்தது.

இச்சலுகை வழியாக சட்டக்கல்லூரிக்குச் சென்ற மகிந்த ராஜபக்சவுக்கு இறுதிப் பரீட்சையில் அவரது நெருங்கிய நண்பரான இன்னொரு சட்டத்தரணி ‘குதிரை’ ஓடியதாக அவரது கட்சியினரே பகிரங்கமாகத் தெரிவித்து வந்தனர். இதனை நிரூபிக்கும் வகையில் பரீட்சையில் உதவிய அந்தச் சட்டத்தரணிக்கு அமைச்சர் பதவி கிடைத்ததும், நீர்கொழும்பு வைபவம் ஒன்றில் அவர் கொல்லப்பட்ட இடத்துக்கு அவரது மனைவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் அமைச்சர் பதவியும் கிடைத்தது பற்றி பரவலாகப் பேசப்பட்டு வந்தது. ‘அப்பன் வழி மைந்தன்’ என்றவாறு இவர்களின் சட்டக்கல்வி ஏதோ ஒருவகையில் புகழ் பெற்றிருந்தது.

எதிர்பாராது வந்த ஜே.வி.பி.யின் அரசாட்சி இப்போது எல்லாக் குப்பைகளையும் (14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியக் குடும்ப கிரகங்களின் அணிவகுப்பு




- குரு அரவிந்தன்

சோதிடம் மூலம்தான் நாங்கள் முதலில் கிரகங்கள் பற்றி அறிந்திருந்தோம். நவக்கிரகங்கள் என்று சொல்லி ஒன்பது கிரகங்களைக் குறிப்பிட்டார்கள். ஆனால் அறிவியல் சார்ந்து பார்த்தால், இன்று கிரகங்களின் நிலையை அறிய மட்டுமல்ல, நிஜமாகவே எங்களால் அவற்றைப் பார்க்கவும் முடிகின்றது. 'சோலார் பமிலி' என்று ஆங்கிலத்தில் அழைக்கின்ற எங்கள் சூரியக் குடும்பத்தில் ஒன்பது கிரகங்கள் இருந்தன. ஆனால் அதில் ஒரு கிரகத்திற்கு வேண்டிய தன்மைகள் இல்லாததால், 'புளூட்டோ' என்ற அந்தக் கிரகத்தை வெளியே எடுத்து விட்டார்கள். இப்பொழுது எட்டுக் கிரகங்கள் மட்டுமே சூரியக்குடும்பத்தில் கணக்கிடப்படுகின்றன.

இப்போது இரவு வானில் சில அதிசயங்கள் நடப்பதை அறிந்திருப்பீர்கள். இந்த அதிசயங்களை 'கிரகங்களின் அணிவகுப்பு' என்று அழைக்கின்றார்கள். நவீன தொழில் நுட்ப வசதிகள் மூலம் சாதாரண மனிதர்களாலும் இப்போது நடக்கும் கிரகங்களின் அணிவகுப்பைப் பார்க்க முடிகின்றது. இரவு வானத்தைப் பார்த்தால் தெளிவான வானத்தில் ஏராளமான நட்சத்திரங்களைக் காண முடியும். இதில் சூரிய குடும்பத்தைச் சேர்ந்த கிரகங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தூரத்தில் இருப்பதால், எவை என்பதை அடையாளம் காண்பது கடினமானதாகும். இதைக் கருத்தில் கொண்டு இதற்காகக் கணனி மென்பெருளை வடிவமைத்திருக்கிறார்கள். உங்கள் செல்போனில் இதைப் பதிவிறக்கம் செய்வதன் மூலம் வானத்தில் அவை இருக்கும் திசையை அறிந்து உங்களால் இலகுவாகப் பார்க்க முடியும்.

பொதுவாக ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட கிரகங்களின் அணிவகுப்புகள் மிகவும் அரிதானவையாகும். 2025 ஜனவரி 21ம் ஆம் திகதி, வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய ஆறு கிரகங்களும் இரவு வானத்தில் அணிவகுத்திருந்ததால், அவற்றைப் பார்ப்பதற்கு ஒரு அரிய சந்தர்ப்பம் அனேகருக்குக் கிடைத்திருந்தது. இந்த அணிவகுப்பில் உள்ள நான்கு கோள்களை சாதாரண கண்களால் பார்க்க முடியும். இவற்றில் யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவை மிகத் தூரத்தில் இருப்பதால் அவற்றைப் பார்ப்பதற்கு தொலைநோக்கிகள் தேவைப்படுகின்றன.

இந்தக் கிரகங்களின் அணிவகுப்பை சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகுதான் பார்க்க முடியும். செயற்கை ஒளி குறிப்பாகத் தெரு விளக்குகள் இல்லாத இருண்ட பகுதிகளில் இருந்து பார்த்தால் தெளிவாகத் தெரியும். தெளிவான வானம் இருந்தால், உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இரவில் இந்தக் கிரகங்களின் அணிவகுப்பைப் பார்க்க முடியும், நேரமும் திசையும் மாறுபடலாம். இந்த அதிசய நிகழ்வு பெப்ரவரி பிற்பகுதி வரை அதாவது சுமார் ஒரு மாதம் வரை நீடிக்கும் என்று ஆய்வாளர் குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால் இந்தக் கிரகங்கள் இப்போது வானத்தில் இருக்கும் நிலைகளில் அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படலாம்.

ஒரே நாளில் ஏழு கிரகங்களும் காட்சி தரும் அதிசய நிகழ்வும் இந்த மாதம் நடக்க இருக்கிறது. பிப்ரவரி மாதம் 28 ஆம் திகதி, இரவு வானில் ஏற்கனவே காட்சி தரும் ஆறு கிரகங்களுடன் புதனும் இணைய இருக்கிறது. ஏழு கிரகங்கள் தானே தெரிகின்றன எட்டாவது கிரகம் எங்கே என்று நீங்கள் தேடலாம், அது எங்கும் போய்விடவில்லை உங்கள் காலடியில்தான் இருக்கின்றது. மீண்டும் இப்படியான ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட கிரகங்களின் அணிவகுப்பு 2040 ஆண்டுதான் நடைபெறும் என குறிப்புகள் தெரிவிக்கின்றன.

நமது சூரிய குடும்பத்தின் பட்டியலில் எட்டு கோள்கள் இடம் பெற்றருக்கின்றன. இந்தக் கோள்கள் எல்லாம் சூரியனைச் சுற்றி வந்தாலும், வெவ்வேறு வேகத்தில் இவை சுற்றி வருகின்றன. சூரியனுக்கு அருகே உள்ள புதன் கோளை எடுத்துக் கொண்டால் அது சூரியனைச் சுற்றி வர 88 நாட்கள் எடுக்கின்றது. அடுத்துள்ள வெள்ளியை எடுத்துக் கொண்டால் 225 நாட்கள், பூமி சுற்றிவர 365 நாட்கள், செவ்வாய் 687 நாட்கள், வியாழன் 4333 நாட்கள், சனி 10759 நாட்கள், யுரேனஸ் 30687 நாட்கள், நெப்டியூன்: 60190 நாட்கள் எடுக்கின்றன. பூமியில் இருந்து பார்க்கும் போது ஒரே கோட்டில் இவை இருப்பது போலத் தெரிந்தாலும், அவை வெவ்வேறு தூரங்களில் இருக்கின்றன.

# காசா பள்ளத்தாக்கை அபகரிக்கும் ட்ரம்பின் திட்டத்துக்கு இருக்கும் மூன்று அடிப்படை பிரச்னைகள்

பலஸ்தீனத்தில் 1948 ஆம் ஆண்டில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது அந்த மண்ணின் மூலமுதல் குடியிருப்பாளர்களான 7 இலட்சத்துக்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் இடம்பெயரச் செய்யப்பட்டனர். அந்த வலுக்கட்டாயமான பெரும் வெளியேற்றத்தை பாலஸ்தீனர்கள் 'நக்பா' ( பெருங்கேடு ) நினைவுகூருகிறார்கள். 1967 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 6 நாள் போரின்போது மேலும் பெரும் எண்ணிக்கையான பாலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்டனர்.

அவர்களில் ஒரு பிரிவினர் காசா பள்ளத்தாக்கிற்கும் இன்னொரு பிரிவினர் மேற்கு ஆற்றங்கரைக்கும் நகர்ந்த அதேவேளை, பெரும்பான்மையானவர்கள் ஏனைய நாடுகளுக்கு தப்பிச்சென்றார்கள். அங்கெல்லாம் அவர்களும் அவர்களின் வழித்தோன்றல்களும் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

தொடர்ச்சியாக நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அந்த அகதிகள் தங்களது சொந்த மண்ணுக்கு திரும்பிவருவதற்கான உரிமையை இஸ்ரேல் திட்டவட்டமாக நிராகரித்தது. இப்போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கடந்த 15 மாதங்களாக இஸ்ரேலின் இடையறாத குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் அழிவுக்குள்ளான மத்தியகரைக்கடல் ஓரமாக அமைந்திருக்கும் காசா பள்ளத்தாக்கில் இருந்து சுமார் 23 இலட்சம் பாலஸ்தீனர்களை பலவந்தமாக வெளியேற்றுவதற்கு விரும்புகிறார்.

பாலஸ்தீனர்களை அயல் அரபு நாடுகளுக்கு போக வைப்பதும் 'நரகம்' என்று அவர் அழைத்த 360 சதுர கிலோ மீற்றர் பள்ளத்தாக்கை பொறுப்பேற்று அதை மத்திய கிழக்கின் 'றிவீரா'வாக (கடற்கரையோர வனப்பு மிகு பிரதேசமாக) அபிவிருத்தி செய்வதும் ஜனாதிபதி ட்ரம்பின் திட்டமாகும். வாஷிங்டனில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகுவுடன் சேர்ந்து நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் ட்ரம்ப் தேவையானால் காசாவுக்கு துருப்புக்களை அனுப்புவது குறித்தும் கூட பேசினார்.

ஜனாதிபதி பாலஸ்தீனர்களை தற்காலிகமாக இடம்பெயரவைப்பது குறித்தே பேசுகிறார் என்று பிறகு வெள்ளை மாளிகை அறிவித்தது. அமெரிக்க துருப்புக்களை காசாவில் நிலைவைப்பதில் அவர் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை, ஆனால் காசா தொடர்பிலான அவரின் 'வழமையான சிந்தனைக்கு மாறான' யோசனை கருத்தூன்றிய ஒன்றாகும் என்று வெள்ளை மாளிகை தெளிவுபடுத்தியது.

ஆனால், ஜனாதிபதி ட்ரம்பின் திட்டத்துக்கு மூன்று அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. முதலாவ தாக, இஸ்ரேலும் அமெரிக்காவும் அவற்றின் விருப்பத்துக்கு குண்டு வீச்சுக்களை நடத்துவதற்கும் அப்புறப்படுத்துவதற்கும் பாலஸ்தீனர்கள் ஒன்றும் ஏகாதிபத்தியத்தின் சொத்து அல்ல. அவர்கள் கூட்டு வரலாற்றைக் கொண்ட தேசிய அடையாளத்துடனான மக்கள். சமகாலத்திலும் எதிர்காலத்திலும் பாலஸ்தீன மண்ணுடன் அவர்கள் பிணைக்கப்பட்டவர்கள்.

இஸ்ரேலின் இடையறாத குண்டுவீச்சுகளுக்கு மத்தியிலும் காசாவை விட்டுச் செல்வதற்கு பாலஸ்தீனர்கள் மறுக்கிறார்கள். இப்போது ட்ரம்ப் முன்வைக்கும் யோசனை அடிப்படையில் இனச் சுத்திகரிப்புக்கான ஒரு அழைப்பேயாகும். அதாவது இன்னொரு 'நக்பா'.

இரண்டாவதாக, அரபு நாடுகள் (அமெரிக்காவின் நேச அணிகளாக இருக்கும் பல அரபு நாடுகள் உட்பட) ட்ரம்பின் யோசனையை திட்டவட்டமாக நிராகரித்திருக்கின்றன. பலவந்தமாக அகற்றப்பட்ட பாலஸ்தீனர்களினால் சொந்த மண்ணுக்கு மீண்டும் ஒருபோதும் திரும்பக்கூடியதாக இருக்கவில்லை என்பதை அந்த நாடுகள் விளங்கிக்கொள்கின்றன. எதேச்சாதிகார அரபு ஆட்சியாளர்கள் கூட அவர்கள் எவ்வளவுதான் அமெரிக்க உதவியில் தங்கியிருந்தாலும், தங்களது சொந்த மக்களின் உணர்வுகளை மதித்து நடக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மூன்றாவதாக, காசாவை மீளக்கட்டியெழுப்பும் ட்ரம்பின் நோக்கு காசாவில் இஸ்ரேலியர்களை மீளக் குடியமர்த்தும் இஸ்ரேலிய தீவிர வலதுசாரி நிகழ்ச்சித் திட்டத்துக்கு நெருக்கமாக இசைவானதாக இருக்கிறது. இது ஏற்கெனவே விரக்தியடைந்து என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கும் சனத்தொகை ஒன்றை



மேலும் அன்னியப்படுத்தும் என்பதுடன் மேற்காசியாவில் இன்னொரு 'ரைம் பொம்மை' வைப்பதாகவும் இருக்கும்.

ஜனாதிபதி ட்ரம்ப் இனச் சுத்திகரிப்புக்கான அழைப்பைக் கைவிட்டு அதற்கு பதிலாக காசாவில் வெற்றிகரமான போர்நிறுத்தம் ஒன்றை உறுதிசெய்வதற்கு அமெரிக்காவின் செல்வாக்கை பயன்படுத்த வேண்டும். அத்துடன் அமெரிக்கா நிலைபேறானதும் நியாயமானதுமான தீர்வொன்றை காண்பதற்கு , அதாவது பாலஸ்தீனர்களின் உரிமைகளை அங்கீகரிக்கக்கூடியதும் பிராந்தியத்தில் அமைதி சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் உத்தரவாதம் செய்யக்கூடிய கோட்பாட்டை பேணிக்காக்கக் கூடியதுமான தீர்வை காண்பதற்கு பாடுபடவேண்டும். (தி இந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைவர்களின் தேர்தல் காலக் கூட்டுக்கள் யாருக்கானவை?



கந்தையா அருந்தவபாலன்

அரசியலில் கட்சிகள் கூட்டுச் சேருதல், பிரிதல், மீண்டும் வேறு கட்சிகளுடன் சேருதல் என்பவை இயல்பானவை. அதிலும் தேர்தல் காலத்தில் இதனை அதிகளவில் நாம் எதிர்பார்க்க முடியும். ஜனநாயக நாடொன்றில் கட்சிகளின் பிரதான நோக்கம் தேர்தலில் வெற்றி பெறுவதன்மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக இருந்தாலும் வேறு நோக்கங்களுக்காகவும் கட்சிகள் கூட்டுச் சேர்வதை அவதானிக்க முடியும். குறிப்பாக ஆளுங்கட்சியொன்றின் ஜனநாயக மீறல்களுக்கு எதிராக எதிர்கட்சிகள் ஒன்றுசேர்வது பல நாடுகளில் இன்று நிகழ்ந்து வருகிறது. வடக்குக் கிழக்கு அரசியல் கட்சிகளைப் பொறுத்த மட்டில் இரண்டுவகையான கூட்டுக்கள் இடம்பெற்று வருகின்றன. ஒன்று தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான கூட்டுக்கள். இரண்டாவது தமிழ்க்கட்சிகளுக்கும் தேசிய சிங்களக் கட்சிகளுக்கும் இடையிலான கூட்டுகள். இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில்தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் நிகழ்ந்த இரண்டு கூட்டுக்கள் முக்கியமானவையாக கருதப்படுகின்றன. தமிழர்களின் அரசியல் வரலாற்றில் அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்திய இக்கூட்டுகளில் ஒன்று 1971 இலும் மற்றது 2001 இலும் நிகழ்ந்தது. முதலாவது கூட்டு கீரியும் பாம்பும் போல அதுவரை செயற்பட்டுவந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் 1971 இல் ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாகத் (ரியுஎல்எவ்)தோற்றம் பெற்றது. இக்கூட்டில் தொடக்கத்தில் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இணைந்து கொண்டாலும் பின்னர் அது அக்கூட்டிலிருந்து சிறிது காலத்தில் விலகிவிட்டது. பின்னர் குமார் பொன்னம்பலத்தின் காலத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் வெளியேறிவிட்டது. இரண்டாவது கூட்டு யுத்தகாலத்தில் குறிப்பாக தமிழர் தாயகத்தின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்தபோது 2001 இல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய நான்கு கட்சிகள் ஒன்று சேர்ந்து உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ரிஎன்ஏ).

1971 இல் இரு பிரதான தமிழ்க்கட்சிகளின் கூட்டாக உருவான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இப்போது பெயரளவிலான ஒரு கட்சியாக அதன் செயலாளரான ஆனந்தசங்கரியின் கீழ் இருந்தாலும் 1976 இல் அக்கூட்டணி வட்டுக் கோட்டையில் எடுத்த தனிநாட்டுத் தீர்மானந்தான் தமிழர் வரலாற்றில் மட்டுமன்றி இலங்கையின் வரலாற்றிலும் பாரிய மாற்றங்களுக்கு அடிப்படையாக இருந்தது. இத்தீர்மானத்தையும் அதன் பின்னரான தலைவர்களின் உரைகளையும் வேதவாக்காக கொண்ட இளைஞர்கள் அதனை அடைவதற்காக ஆயுத மேந்தினர். ஆயுதப் போராட்டத்தின் பிரமாண்டமான வளர்ச்சியும் 2009 இல் அதன் முடிவும் நாம் அறிந்த ஒன்றே. ஆனால் தலைவர்களோ 1977 ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்களிடையே ஓர் எழுச்சியை உருவாக்கி அதனை அத்தேர்தலில் வாக்குகளாக அறுவடை செய்வதை நோக்கமாகக் கொண்டே அத்தீர்மானத்தை எடுத்திருந்தனர் என்பதை அதன் பின்னரான அவர்களின் நடத்தைகள் வெளிப்படுத்தி நின்றன. அத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 18 ( மொத்தம் 165) ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் அது வரலாற்றில் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகும் வாய்ப்பையும் வழங்கியது. ஆனால் அத்தேர்தலில் அக்கட்சி முன்வைத்த தனிநாட்டுத் தீர்மானம் தொடர்பான திட்டமோ வழிவரைபடமோ அதன் தலைவர்களிடம் இருக்கவில்லை. தனிநாட்டுக் கோரிக்கையை மக்கள் முன்வைத்து தேர்தல்மூலம் அங்கீகாரம்




பெற்ற அவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பெறுவதற்குத் தயாராகினர். அதுமட்டுமன்றி தேர்தலையே நோக்காகக் கொண்டு அவர்களால் முன்வைக்கப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையை உண்மையென ஏற்று இயங்கத் தொடங்கிய இளைஞர்களுக்கு எதிரான செயற்பாடுகளிலும் அவர்கள் இறங்கத் தயங்கவில்லை. அதனால் அவர்கள் தமிழர் அரசியலிலிருந்து மட்டுமல்ல சிலர் உலகிலிருந்தும் அப்புறப்படுத்தப்பட்டதையும் மக்கள் அறிவர்.

2001 இல் நான்கு கட்சிகள் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியபோது இருந்த அரசியல் களச் சூழ்நிலை முன்பைவிட முற்றிலும் வேறானது. அந்நேரத்தில் ஆயுதப் போராட்டம் உச்சம் பெற்றிருந்ததுடன் அதனை விடுதலைப்புலிகள் தனித்து தம்வசமாக்க வைத்திருந்ததுடன் ஈ.பி. ஆர். எல்.எவ், ரெலோ போன்ற இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு பெயரளவிலான அரசியல் இயக்கங்களாக இருந்தன. புளொட்டும் ஈ.பி.டி.பியும் தொடர்ந்து அரச ஆதரவுக் குழுக்களாகவே இயங்கி வந்தன. இந்தச் சூழ்நிலையில்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கான கரு கிழக்கில் உருவானது. உண்மையில் இக்கூட்டின் உருவாக்கத்தில் விடுதலைப் புலிகளின் பங்கு இருக்கவில்லை எனினும் அதை அவர்கள் அனுமதித்திருந்தனர். அதுமட்டுமன்றி அக்கூட்டணி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. 2001 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அக்கூட்டணி 15 ஆசனங்களைக் கைப்பற்றியது. பின்னர் 2004 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் வழிகாட்டுதலின் கீழ் போட்டியிட்டு அதிஉச்சமாக 22 ஆசனங்களை அது கைப்பற்றியது. அதன்பின்னர் அக்கூட்டணிக் கட்சி விடுதலைப் புலிகளின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் இயங்கியதுடன் அதனை தமக்கான ஜனநாயக முகமாக விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தலை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியல் கட்சிகளின் கூட்டு என்றாலும் அதனை விடுதலைப் புலிகள் மக்களின் எழுச்சிக்கும், தமது போராட்டுத்துக்கான நியாயப்பாட்டை நிறுவுவதற்குமான ஒரு கருவியாக கையாண்டனர் என்பதே உண்மை. ஆயுதப் போராட்ட காலத்தில் அதன் பங்களிப்பு வரையறைக்கப்பட்டிருந்தாலும் 2009இன் பின்னர் தமிழ்மக்களின் உரிமைகளை நோக்கிய அரசியலுக்கான முழுப்பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமே வந்து சேர்ந்தது. ஆனால் அப்பொறுப்பைச் சரிவர உணராது தலைவர்கள் தன்னிச்சையாகச் செயற்பட்டதன் விளைவு இன்று தமிழர்களின் அரசியல் நடுச்சந்தியில் வந்து நிற்கிறது.

தேன்கூடு போல சிரமப்பட்டு உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கல்லெறிந்து உடைப்பது போல உடைந்தவர்கள்அல்லது அதற்குத் துணைபோனவர்கள் சிலர் இன்று மீண்டும் ஒற்றுமை, கூட்டு என்று கதையளக்கத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அண்மையில் தமிழரசுக் கட்சியின் தலைவராக இன்னும் நீடிக்கின்ற மாவை சேனாதிராசாவை சந்தித்த தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இக் கூட்டை வலியுறுத்தியாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி புதியகூட்டொன்றை அமைத்து தாங்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று கூறிவரும் கட்சித்தலைவர்கள் சிலரும் மாவை சேனாதிராசாவைச் சந்தித்து இதுபோன்றதொரு கோரிக்கையை முன்வைத்ததாகத் தெரிகிறது. இதில் வேடிக்கை என்ன வென்றால் வெளியேறக் காரணமான தரப்புகளில் ஒருபகுதியினர் முன்னரைப் போல் தங்களுடன் வந்து இணையும்படி கோரிக்கை விடுக்கின்றனர். வெளியேறியவர்களோ அது சரிவராது தாங்கள்தான் உண்மையான கூட்டமைப்பு என்றும், விரும்பினால் தங்களுடன் வந்து இணையுமாறும் கூறுகின்றனர். அப்படியானால் இவர்கள் இப்போது விரும்பும் ஒற்றுமை, கூட்டு என்பன யாருக்கானது? மக்களுக்கானதா அல்லது தமக்கானதா?

> தமிழரசுக்கட்சியின் உத்தியோகபூர்வமானவர்கள் தாங்கள்தான் எனக்கூறும் இன்னொரு அணியின் தலைவரான சுமந்திரன் தேர்தல்கூட்டுத் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்

மறுபுறத்தில் தமிழரசுக்கட்சியின் உத்தியோகபூர்வமானவர்கள் தாங்கள்தான் எனக்கூறும் இன்னோர் அணியின் தலைவரான சுமந்திரன் தேர்தல்கூட்டுத் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். வடக்குக் கிழக்கில் மட்டும் தேர்தலில் பங்கெடுத்துவரும் தமிழரசுக்கட்சி தென்னிலங்கைக் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுவார்த்தையில் ஈடு பட வேண்டிய தேவை என்ன? சிதறிக் கிடக்கும் தமிழ்மக்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்கான நாடாளுமன்ற ஆசனங் களை தென்னிலங்கைக் கட்சிகளுக்கோ அல்லது அக்கட்சிகளின் தமிழ் தரகர்களுக்கோ செல்வதைத் தடுக்கவேண்டிய பொறுப்புடைய ஒருகட்சி இவ்வாறு தென்னிலங்கைக் கட்சியொன்றுடன் பேச்சுவார்த்தையில் இறங்கியிருப்பதன் பின்னால் வேறு நோக்கங்களும் இருக்கக்கூடும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளரை எதிர்த்து சஜித்துக்கு ஆதரவாக வேலைசெய்த சுமந்திரன், சஜித் வெல்வதற்கான வாய்ப்பு உள்ளதென்றும் அதனால் அவரது வெற்றிக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றைப் பெறமுடியும் என்றும் அதற்கான வாதத்தை முன்வைத்திருந்தார். வழமையாக அவர் முன்வைக்கும் ஒரு வாதந்தான் என்றாலும் எதிர்பார்ப்பின் அடிப்படையில் அதிலும் ஒரு நியாயம் இருந்தது. ஆனால் இன்று தேசிய மக்கள் சக்தியின் அனுரகுமார திசநாயக ஆட்சியதிகாரத்தைப் பெற்றுள்ளார். சுமந்திரன் முன்வைத்த வாதத்தின்படி பார்த்தால் நாடாளுமன்றத்தில் அனுரவின் கட்சியைப் பலப்படுத்துவதன் மூலமே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெறமுடியும். அதன்படி தேசிய மக்கள் சக்தியுடன்தான் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தைக் கைப்பற்றுவதாலோ அல்லது அதிக ஆசனங்களைப் பெறுவதாலோ தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறுமானால் அது நாட்டில் அரசியல் குழப்ப நிலைக்கு வழிவகுக்குமேயன்றி நாட்டுக்கோ அல்லது மக்களுக்கோ எந்தவிதமான நன்மையையும் தரப்போவதில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பா. சதீசன்,**
**கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**


**கேள்வி:** உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்ப அனுமதிக்க முடியாது. அதனால் தையிட்டி விகாரை விவகாரத்தை விரைவில் தீர்த்து வைப்போம் என கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளாரே. தையிட்டி விகாரையை இடித்து விட வேண்டும் என்று ஒருதரப்பினர் கேட்கின்றனர். இன்னுமொரு தரப்பினரோ, விகாரையை சுற்றியுள்ள காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்கின்றனர். விகாரை கட்டப்பட்ட காணியின் உரிமையாளருக்கு நஷ்டஈடுவழங்கவதுபற்றி பேசுகிறோம் என்று ஆளுனர் கூறுகிறார். பிரச்சினையை எப்படித் தீர்த்துவைக்கலாம் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** பிரச்சினையை அவர்கள் எப்படி தீர்த்து வைக்கிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம். ஆனால், சந்திரசேகர் சொல்லியிருக்கின்ற ஒருவிடயத்தை கவனித்தீர்களா?. இனவாதத்திற்கு இனி இந்த அரசாங்கம் இடமளிக்கப்போவதில்லை என்றுதான் தொடர்ந்து ஆளுந்தரப்பில் சொல்லப்பட்டு வருகின்றது. ஆனால், இப்போது அமைச்சர் சந்திரசேகரரோ இனவாதம் உறக்கத்தில்தான் இருக்கின்றது என்கிறார். அதாவது உறக்கத்தில் எவரும் குறிப்பிட்ட நேரம்வரை தான் இருக்கலாம். எனவே மீண்டும் எழும்பவிட மாட்டோம் என்றால், அதன் அர்த்தம் அதனை இல்லாமல் செய்துவிடுவோம் என்கின்றாரோ அல்லது எழும்பாமல் பாத்துக்கொள்வோம் என்கின்றரா என்பது தெரியவில்லை. இனவாதம் என்பது ஒருதரப்பில் மாத்திரம் இப்பதல்ல. அது இரண்டுதரப்பிலும் இருப்பதுதான். இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்த்தாலும் இனவாதம் உறக்கத்தில் இருந்து எழுந்துதான் ஆகும். கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம் எப்படி நடக்கின்றது என்று.

---

**கே. இரவீந்திரராசா,**
**சின்ன உப்போடை, மட்டக்களப்பு**

**கேள்வி:** அதானி நிறுவனத்தின் காற்றாலை திட் த்தை மாற்றி சீனாவுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ வழங்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்திருக்கிறார். அதானி நிறுவனம் இலங்கையில் மன்னார் பிரதேசத்தில் நிர்மாணிக்க திட்டமிட்டிருந்த ஒரு பில்லியன் டொலர் முதலீட்டுடனான காற்றாலை மின்சார உற்பத்தி திட்டத்திலிருந்து விலகிகொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவித்திருந்த நிலையில், இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களின் தலையீட்டில்



அடுத்த வாரம் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சு ஒன்றை நடத்த இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளனவே. பேச்சு சுமூகமாக நடக்கவில்லை என்றால், அமைச்சர் சொல்வதுபோல வேறு யாருக்கும் கொடுக்கவில்லை என்றால், திட்டமே வராது என்று நினைக்கலாமா?

**வியுக்தியார்:** திட்டம் அறிவிக்கப்பட்ட காலத்திலிருந்து அதுபற்றி பல முறைப்பாடுகளும் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டே வந்தது. சுற்றுச்சூழல் ஆர்வலர்க ளிலிருந்து, உள்ளூர் மீனவர்கள் வரை அந்த திட்டத்தை எதிர்த்தே வந்தனர். இன்றைய ஆட்சியாளர்கள் எதிர்க் கட்சியிலிருக்கும்போதும் இந்தத் திட்டத்திற்கு எதிரா கவே கருத்துத் தெரிவித்து வந்தனர். இதனால் அதானியு டன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மாற்றுவதற்கு அரசாங் கம் முயற்சி செய்ததும், அதனால் அதானி குழுமம் திட்டத்திலிருந்தே வெளியேறியதும் நடந்திருக்கின்றது. ஒரு அரசாங்கம் ஆட்சியில் இருக்கும்போது செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றை இன்னுமொரு அரசாங்கம் ஆட்சிக்குவந்ததும் மாற்றமுயற்சிப்பது - எதிர்காலத்தில் இதுபோன்ற முதலீடுகளில் முதலிட வருபவர்களை எச்சரிக்கையுடன் இருக்கச்செய்யும் என்பதுமட்டுமல்ல முதலீட்டாளர்களை ஈர்ப்பதும் கடினமானதாகிவிடும். அதற்காக அதானி குழுமத்தினுடனான ஒப்பந்தம் சரியானது என்று யாரும் வாதிடப்போவதில்லை. ஆனால், அரசாங்கங்கள் மாறுகின்றபோது இதுபோன்ற ஒப்பந்தங்களை மாற்றநினைப்பது சரியானதா என்பது தெரியவில்லை. நமது இயற்கை வளங்களை மற்றவர்கள் வியாபாரமாக அனுமதிப்பதே தவறான முன்னுதாரணம்தான். அதானி குழுமம் பேச்சுக்களில் தீர்வு கிடைக்காவிட்டால், வேறு நாடு எதற்கும் இந்தத் திட்டத்தை கொடுக்க மாட்டாம் என்கிறார் நமது அமைச்சர், அப்படியெனில் அடுத்து என்ன என்பதையும் அல்லவா சொல்ல வேண்டும்.




# வியுக்தியார் பதில்கள்

**சி. சதீஸ்குமார்,**
**உருத்திரபுரம், கிளிநொச்சி.**

**கேள்வி:** ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட தலைவர் பதவி அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப் பட்டபோதிலும், அவருக்கு அப்பதவி வழங்கப்படவில்லை என தெரியவருகின்றது. மாறாக கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ, கொழும்பு மாவட்டத் தலைவர் பதவியையும் தன்வசம் வைத்திருக்க முடிவு செய்துள்ளார் என அறியமுடிகின்றது என்றொரு செய்தி பார்த்தேன். அங்கும் கட்சிக்குள் குத்துவெட்டு தொடங்கிவிட்டதோ?



**வியுக்தியார்:** ஐக்கிய தேசியக்கட்சியில் இரண்டு தடவைகள் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த ரணிலுக்கு எதிராக கட்சிக்குள் கலகம் செய்து தலைமைப் பதவிக்கு வரமுடியாமல்போனதும் கட்சியை இரண்டாக்கியவர் சஜித். இவரது இந்த முயற்சிக்கு அவரோடு கூட இருந்தவர்களில் ஹர்ஷவும் ஒருவர். இப்போது ரணிலைப் போலவே சஜித்தும் இரண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் தன் னோடு இருக்கிறவர்கள் தான் செய்ததுபோல செய்து போடுவார்களோ என்று பயம்கொள்வது நியாயமானது தானே. அப்போதெல்லாம் 'அரசன் அண்டறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்" என்பார்கள். ஆனால் இப்போ தெல்லாம் தெய்வமும் அண்டறுக்கத் தொடங்கியிருக் கின்றது என்பது சஜித்துக்கும் தெரிந்திருக்கும்தானே. ஒரு கொசுறுத் தகவல்: மகிந்தர் ஆட்சியில் இருக்கும் போது எதிர்க் கட்சித் தலைவரான ரணிலுக்கு, அவர் தலைமை தொடர மறைமுகமாக மகிந்தர் உதவினார் என்று கூறப்படுவதுண்டு. பலமற்ற தலைவர் ஒருவர் எதிரணியில் தலைமை தாங்குவது தனக்கு சாதகம் என்று மகிந்தர் அவருக்கு உதவியதாக சொல்வார்கள். இப்போது சஜித்துக்கு ஆளுந்தரப்பு சில உதவிகளை செய்கின்றதாம்.

---

**த. பிரதீபன்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**


**கேள்வி:** இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு அதன் எதிராளி ஒருவரை ஆள்மாற்றம் செய்ய இடமளிப்பதா என்பது குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதே. அதைவிட முக்கியமானது, வழக்கை இணக்கமாக முடிவுறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காகவே வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டது. எனினும், வழக்கின் எதிராளிகளான பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், ச. குகதாசன் மற்றும் முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் வழக்கை முடிவுறுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து விசாரணையில் கடும் விவாதங்கள் இடம்பெற்றனவாமே. இணைக்கமாக முடிவுறுத்துவது பற்றியே கடும் வாதம் நடந்தது என்றால், எப்படி இணக்கப்பாடு எற்படும் என்று நினைக்கின்றீர்கள்?.

**வியுக்தியார்:** எனக்கு என்னவோ, வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவரான சீ.வீ.கே. சிவஞானம் ஐயா, மாகாண சபை இல்லாதபோதிலும் சட்டப்படி அவைத் தலைவராக ஏழு வருடமாக சம்பளம் இதர வசதிகளுடன் இன்றுவரை தொடர்கிறார். அரசியலமைப்பு சட்டப்படி ஒரு மாகாண சபையின் அவைத் தலைவர் அடுத்த மாகாணசபை கூடும்வரை அந்தப் பதவியில் தொடர்வார் என்று இருப்பதால் அவர் சகல சௌகரியங்களுடன் அந்தப் பதவியில் இன்றுவரை தொடர்கிறார். மாகாணசபைக்கு தேர்தல்கள் நடக்கும் என்று அரச தரப்பில் சொல்லப்பட்டாலும் அது நடக்கும்போதுதான் நாம் அதனை நம்பலாம். அது போலத்தான், அவருக்கு இப்போது கிடைத்திருக்கும் கட்சித் தலைவர் பதவியும் அவருக்கு நீண்டகாலத்திற்கு தொடரப்போகின்றது என்பதைத்தான் இந்த வழக்கின் போக்கு நமக்கு உணர்த்துகின்றது. அதைவிட கடந்த தவணை இன்னுமொரு விடயத்தையும் நமக்கு கோடிட்டுக்காட்டியிருக்கின்றது. இதுவரை சுமந்திரன் அணி என்று நம்பப்பட்ட திருமலை குகதாசன் இப்போது அணி மாறியிருக்கிறார் என்பதுதான் அது.

---

**ச. துவாரகன்,**
**பூந்தோட்டம், வவுனியா**

**கேள்வி:** தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கடந்த புதன்கிழமை நடந்த போராட்டத்தில் ஈ. பி. டி. பி. கட்சியினரும் பங்கேற்றிருந்தனர். தையிட்டியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட விகாரையை அகற்றி, அந்தக் காணிகளை மக்களிடமே வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி அங்கு தொடர் போராட்டம்



நடைபெற்றது. இந்த நிலையில், இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஈ. பி. டி. பி. கட்சியினரும் பங்கேற்றிருந்தனரே. அவர்களின் இந்த மாற்றத்திற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** இதில் என்ன நினைப்பதற்கு இருக்கின்றது?. விகாரையை இடிக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலுவாக வைத்தால்தானே, அவர்களின் நண்பர்கள் தெற்கில் வலுவான இனவாதத்தை முன்வைக்கலாம் என்று நினைக்கின்றார்களோ தெரியவில்லையே. அந்த போராட்டத்தில் அவர்கள் கலந்துகொண்டாலும் மன்னிக்கலாம். ஆனால், நல்லாட்சி அரசாங்கத்திற்கு முண்டுகொடுத்துக்கொண்டிருந்த அப்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதற்கான தார்மிக உரிமை அற்றவர்கள். நல்லாட்சி அரசின் காலத்தில்தான் அந்த விகாரையை கட்டினார்கள். அதைவிட நல்லாட்சிக்காலத்தில்தான் வடக்கு கிழக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகளை அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டது. அந்த நல்லாட்சி காலத்தில் ஒவ்வொரு பட்ஜட்டையும் எதிர்க் கட்சி தலைவர் பதவியையும் வைத்துக்கொண்டு ஆதரித்த ஒரேயொரு எதிர்க்கட்சி என்ற பெருமையும் நமது கூட்டமைப்புக்குத்தான் உண்டு. என்னவோ, கஜேந்திரகுமார் தன்பின்னால் தமிழ் கட்சிகளை அணிதிரள வைத்துவிட்டார் என்பது மட்டும்தான் இந்தப் போராட்டம் தமிழ் மக்களுக்கு வெளிப்பிடுத்திய ஒன்று.

---

**எஸ். நிதர்சன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்**

**கேள்வி:** தமிழீழ விடுதலைப் புலிகள் உள்நாட்டு யுத்தத்தின் போது 33,000 மெகாவோல்ட் மின் பிறப்பாக்கியை தீயிட்டு கொழுத்திய போது கூட, நாடளாவிய ரீதியில் மின்துண்டிக்கப்படவில்லை. அவ்வாறிருக்கையில் குரங்கின் மீது பழி சுமத்தி குரங்கு சேட்டைகள் காண்பிக்க வேண்டாம். அளவுக்கதிகமாக மக்களை ஏமாற்றவும் முற்பட வேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எச்சரித்துள்ளதே.



**வியுக்தியார்:** ஐக்கிய மக்கள் சக்தி, அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தை - மகிந்த அரசு, அதற்கு முன்னர் சந்திரிகா அரசுக்கு சான்றிதழ் வழங்கியிருக்கின் றது என்று நினைக்கின்றேன். அப்போது நாட்டின் ஒருபகுதிக்கு மின்சாரமே வழங்கப்படவில்லை என்பது ஐக்கிய மக்கள் சக்திக்கு தெரிந்திருக்க நியாயம் இல்லைத் தானே. அப்போது அவர்கள் பிறக்கவே இல்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐங்கரன் விக்கினேஸ்வரா


# எலான் மஸ்க்கிற்கு கூடுதல் அதிகாரம்: அமெரிக்காவின் நிழல் ஜனாதிபதியா?



வாஷிங்டனில் உயர் அதிகாரிகளின் எதிர்ப்பை மீறி எலான் மஸ்க்கிற்கு அதிபர் ட்ரம்ப் கூடுதல் அதிகாரங்களை அளித்துள்ளது அமெரிக்க அரசியலில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

உலகின் முன்னணி பணக்காரரும் பிரபல தொழிலதிபருமான எலான் மஸ்க், அதிபர் தேர்தலில் ட்ரம்ப்பின் வெற்றிக்கு பெரிதும் துணை நின்றார். தேர்தல் வெற்றிக்குப்பின் அமெரிக்க அரசின் நிர்வாகத்தை முற்றிலும் சீர்திருத்தும் புதிய அமைப்பிற்கு தலைவராக எலான் மஸ்க்கை ட்ரம்ப் நியமித்தார்.

தற்போதய சூழ்நிலையில் அமெரிக்காவில் அரசு உயரதிகாரிகளில் இருந்து கடைநிலை ஊழியர்கள் வரை வேலையை விட்டு அனுப்புவதில் இருந்து பழைய நடைமுறைகளை ரத்து செய்வது வரை மஸ்க்கின் செயல்பாடுகள் கடும் எதிர்ப்பை சந்தித்துள்ளது.



ஆனாலும் இந்த எதிர்ப்புகளை புறந்தள்ளி மஸ்க்குக்கு இன்னும் கூடுதல் அதிகாரங்களை தரும் அறிவிப்பை ட்ரம்ப் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் நாஜி வணக்கம் செலுத்தி சர்ச்சையில் சிக்கிய எலான் மஸ்க், தற்போது வெள்ளை மாளிகையில் ட்ரம்ப்புக்கு சமமாக அமர்ந்து பேசும் அளவுக்கு ட்ரம்புடன் மிக நெருக்கமான உறவுகளை பேணி வருகிறார்.

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் எலான் மஸ்க் தன் செயல்களை நியாயப்படுத்தி வருகிறார். இந்த நடவடிக்கைகளுக்காகத் தான் மக்கள் தங்களுக்கு வாக்களித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மஸ்க் ஏற்கனவே எடுத்த பெரும்பாலான நடவடிக்கைகள் அமெரிக்க சட்ட விதிகளை தாண்டி எடுக்கப்பட்டுள்ள நிலையில் பல குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் அரசின் செயல்பாடுகளை எதிர்த்து அமெரிக்காவில் சர்ச்சைகள் வெடித்துள்ளன. எலான் மஸ்க்கை செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பி விடுங்கள் என வாஷிங்டனில் ஒரு பதாகையில் எழுதப்பட்டிருந்தது.

தற்போது அவருக்கு கிடைத்துள்ள அதிகாரங்கள் இன்னும் என்னென்ன விளைவுகளை ஏற்படுத்துமோ என்ற அச்சம் அமெரிக்கர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பிடம் இருந்து அதிகாரங்கள் எலான் மஸ்க்கிற்கு கை மாறுகிறதா என்ற ரீதியிலும் அமெரிக்காவில் கேள்விகள் எழுந்துள்ளன. அதிபர் மட்டுமே பேட்டியளிக்கும் வெள்ளை மாளிகையில் இருந்து மஸ்க் பேட்டியளித்த நிலையில் 'பிரசிடெண்ட் மஸ்க்' என்றே சமூக வலைத் தளங்களில் பரலாக பரவி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

உலகின் முன்னணி தொழில் நுட்ப கம்பனிகளின் உரிமையாளர், டெஸ்லா என்ற கார்த் தயாரிப்பு கம்பனி, ஸ்பேஸ் எக்ஸ் என்ற விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், எக்ஸ் என்ற சமூக ஊடக வலை தளம் கம்பனிகளின் பெயர்களை இப்படி பட்டியல் இட்டுக் கொண்டே போகலாம்.

எலான் மஸ்க் 500 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களுக்கு உரிமை கொண்டாடக் கூடிய உலகின் மிகப் பெரும் செல்வந்தராக இருந்தாலும், கடந்த ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்புக்கு உதவி செய்தார். பிரசாரத்திற்கு பெருமளவு பணமும் கொடுத்தார் என்பது வெளிப்படை.

இந்த உதவிக்கு பிரதி உபகாரமாக ஆட்சி அதிகார கட்டமைப்பில் முக்கியமானதொரு பதவியை வழங்கப் போவதாக ட்ரம்ப் அறிவித்து இருந்தார்.

முதற்கட்டமாக அரச செயற்றிறன் திணைக்களம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் தலைமைப் பதவியை எலான் மஸ்க்குக்கு வழங்குவதே ட்ரம்பின் திட்டமாக இருந்தது. இதன் மூலம், அமெரிக்க அரசியலில் எலான் மஸ்க்கின் ஆதிக்கத்தை வலுவாக உறுதிப்படுத்துவது ட்ரம்பின் நோக்கமாக இருந்தது.

சமகால அரசியல், சமூக, பொருளாதார, தொழில்நுட்ப உலகில் எலான் மஸ்க்கின் பாத்திரம் எந்த வகையிலும் தவிர்க்க முடியாதது. ஆனால் அமெரிக்காவில் அதுவே தீவிர சர்ச்சைக்குரியதாக உள்ளது.

ஒரு புறத்தில் வலுவான இலட்சியமும், தொலை நோக்கும் கொண்டு உலகை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் தொழில் முனைவராக எலான் மஸ்க் விளங்குகிறார். மறுபுறத்தில் தமது தொழில் நுட்பத்தைத் தாண்டியும் அரசியல் ஆதிக்கத்தை செலுத்த முனையும் அதிகார ஆளுமையை பிரயோகிக்க முயல்கின்றார்.

அமெரிக்காவின் அரசியலைக் கட்டமைத்து, சர்வதேச அரசியல் கருத்தா டல்கள் எத்திசையில் செல்ல வேண்டும் என்பதை தீர்மானிக்கக் கூடிய சக்தியாக தம்மை மாற்றிக் கொள்ள எலான் மஸ்க் எத்தனிக்கிறார். இந்த எத்தனிப்பு சமகால செயற்பாடுகளில் தெளிவாக வெளிப்படுவதை அவதானிக்கலாம்.

சில வருடங்களுக்கு முன்னர், டுவிட் டர் சமூக வலை தளத்தை எலான் மஸ்க் கொள்வனவு செய்தார். அதனை 'எக்ஸ்' என்று பெயர் மாற்றம் செய்தாரோ அன்றைய நாளில் இருந்து அவரது அரசியல் பயணம் தீவிரம் பெற்றது.

மேற்குலகைப் பொறுத்த வரையில், 'எக்ஸ்' என்பது மிகவும் செல்வாக்கு செலுத்தக்கூடிய சமூக ஊடகமாகும்.

உலகின் பல நாடுகளைச் சேர்ந்த கோடிக்கணக்கான பயனாளிகள் எக்ஸில் இணைந்திருக்கிறார்கள். இவர்களில் செல்வாக்கு செலுத்தக் கூடிய அரசியல்வாதிகள், வர்த்தக பிரமுகர்கள், வாக்காளர்கள் என்று பல தரப்பினரும் உள்ளடங்குகிறார்கள்.

இந்த பயனாளிகளின் மீது தாம் விரும்பும் கருத்தை திணிக்கும் சக்தி எலான் மஸ்க்கிற்கு உண்டு. எந்தெந்த கருத்துக்களுக்கு இடமளிக்கலாம், எந்தக் கருத்தை பெருப்பித்துக் காட்டி, எந்தக் கருத்தை மூலையில் தள்ளி விடலாமென எலான் மஸ்க் தீர்மானிக்கும் வல்லமை அவரிடம் உண்டு.

> ஒரு புறத்தில் வலுவான இலட்சியமும், தொலை நோக்கும் கொண்டு உலகை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் தொழில் முனைவராக எலான் மஸ்க் விளங்குகிறார். மறுபுறத்தில் தனது தொழில் நுட்பத்தைத் தாண்டியும் அரசியல் ஆதிக்கத்தை செலுத்த முனையும் அதிகார ஆளுமையை பிரயோகிக்க முயல்கின்றார்




2023இல் பிரிட்டனில் முஸ்லிம் புகலிடக் கோரிக்கையாளர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கலவரத்தைத் தூண்டியதன் பின்னணியில், எக்ஸ் தளத்திற்கு முக்கிய பங்கு இருக்கிறது என்ற பரவலான குற்றச்சாட்டு உள்ளது.


பிரிட்டனில் சிவில் யுத்தம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது என்று எலான் மஸ்க் பதிவிட்டதையும், அதன் அரசியல் விளைவுகளையும் ஒரு உதாரணமாக கூறலாம்.

ஜேர்மனியில் வெளிநாட்டவர்கள் வந்து குடியேறுவதை ஆட்சேபிக்கும் ஏ.எவ்.டி என்ற கடும் போக்கு தீவிர வலது சாரி கட்சியையும் எலான் மஸ்க் ஆதரித்தார். இந்தக் கட்சியே ஜேர்மன் மக்களை மீட்கக் கூடிய சக்தி உள்ளவர்கள் என்றும் பதிவிட்டார்.

எலான் மஸ்க்கின் இத்தகைய பதிவுகள் ஊடக நெறிமுறைகளுக்கு முரணானது மாத்திரமன்றி, ஐரோப்பிய ஒன்றியம் சார்ந்த சட்டங்களையும் மீறுகிறதா என்றும் விமர்சிக்கப்பட்டது.

இதேபோன்று தான், வெனிசுலாவின் ஜனாதிபதி தேர்தலிலும் எலான் மஸ்க் செல்வாக்கு செலுத்த முனைந்ததாக குற்றம் சுமத்தப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்படாத கல்வி முறையை உருவாக்குவதே அரசின் நோக்கம்

## பிரதமர் ஹரிணி திட்டவட்டம்

பொலநறுவை, பெப்.16

கல்வித் துறையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களின் மூலம் பிள்ளைகள் பாடசாலையை விட்டு இடைவிலகாத, கைவிடப்படாத கல்வி முறைமையை உருவாக்குவதே எமது அரசின் நோக்கமாகும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்டத்தில் கல்வித்துறையில் நிலவும் பிரச்னைகள் குறித்து ஆராயும் வகையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"கல்வித் துறையில் இடைவிலகும் பிள்ளைகளுக்கு ஏதாவது செய்தாக வேண்டும். எவரையும் கைவிட முடியாது. தொழிற்கல்வி என்பது இடைவிலகும் பிள்ளைகளுக்கு கொடுக்கும் ஏதேனும் ஒரு மருந்தல்ல. தொழிற்கல்வி பற்றி நாம் அப்படி சிந்திக்கக் கூடாது. தொழிற்கல்வியும் கல்வியின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும். பாடசாலை கல்வி முறையிலேயே தொழிற்கல்வி வழங்கப்பட வேண்டும்.

எல்லோரும் பொறியியலாளராகவோ அல்லது மருத்துவராகவோ இருக்க முடியாது. அப்படியிருக்கவும் வேண்டியதில்லை. அத்தகைய சமூகம் சமநிலையான சமூகம் அல்ல. சமூகம் ஆரோக்கியமாக இருப்பதற்கு பல தொழில்கள், திறன்கள் மற்றும் ஆற்றல்கள் அவசியம். கல்வி அமைப்பிலும் அந்தப் பாதை திறக்கப்பட வேண்டும். அத்தகைய வாழ்க்கைப் பாதைகளைத் திறக்கும் கல்வி முறையை நாங்கள் முன்மொழிந்துள்ளோம்"- என்றார். (எ)



# பிடியளவு கமநிலத்துக்கு செயல்திட்டம் ஆரம்பம்

வவுனியா, பெப்.16

நாடளாவிய ரீதியில் 'பிடியளவு கமநிலத்துக்கு ஒன்றிணைவோம்' நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்றையதினம் வவுனியா கோவில்குளம் கமநல சேவை திணைக்களத்தில் குறித்த திட்டமானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பயிரிடப்படாது காணப்படுகின்ற வயல் நிலங்கள் மற்றும் விவசாய நிலங்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளச்செய்வதனை நோக்கமாக கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. விமலரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார் கலந்து கொண்டு குறித்த திட்டத்தை ஆரம்பித்து வைத்ததுடன், பண்டாரிக்குளம், பட்டாணிசூர் உட்பட பல பகுதிகளிலும் ஒலி பொருக்கி மூலமாக விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் பயிரிடப்படாத வயல் நிலங்கள் மற்றும் விவசாய நிலங்களின் உரிமையாளர்களுக்கு துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (எ- 10)

# போலி நாணயத்தாள்களுடன் பொலிஸாரால் இருவர் கைது

களுத்துறை, பெப்.16

பாணந்துறை, பின்வத்தை பிரதேசத்தில் 5000 ரூபாய் போலி நாணயத்தாள்களுடன் பெண் உட்பட இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 5000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் ஐந்து பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

பொலிஸாரின் விசாரணையில், சந்தேக நபர்கள் இருவரும் போலி நாணயத்தாள்களை பயன்படுத்தி விற்பனை நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்து வந்தமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மொஹமட் பைசல் எம்.பியின் உறவினருக்கு விளக்கமறியல்

கொழும்பு, பெப்.16

வீதி விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் பைசலின் உறவினரை நாளை 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாரவில பதில் நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கொஸ்வத்தை, ஹால்தடுவன பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் பைசல் பயணித்த கார், வீதியை விட்டு விலகி மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இதனையடுத்து, காரின் சாரதியான பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் பைசலின் உறவினர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை நாளை 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

## உலக மட்ட அரசியல்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இலங்கையை வலியுறுத்தி மனித உரிமைகள் பேரவையில் தொடர்ச்சியாக தீர்மானங்களை நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு 2011 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்கா தலைமைதாங்கி வந்தது என்பது கவனிக்கத் தக்கது.

இலங்கையில் சர்ச்சைக்குரியவையாக இருக்கும் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தின் மீதான நெருக்குதல் குறைவதற்கே சாத்தியம் இருக்கிறது.

அமெரிக்காவின் புதிய அரசாங்கம் அதன் சொந்த சர்வதேச உதவி நிறுவனமான யூ.எஸ். எயிட் ஊடாக வெளிநாடுகளுக்கு வழங்கிவந்த உதவிகளை இடைநிறுத்தியிருக்கிறது. அந்த நடவடிக்கை பன்முக சமூகம் ஒன்றுக்கு அவசியமான அரசியல் கட்டமைப்புக் கள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் நிலைபேறான சமாதானத்தை ஏற்படுத்து வதற்காக பல வேறு நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட செயன்முறைகளின் அனுபவங்களில் இருந்து ஊக்கத்தைப் பெறுவதற்கும் பாடுபட்டு வருகின்ற இலங்கையின் சிவில் சமூக அமைப்புக் களை பெரிதும் பாதித்திருக்கிறது. இலங்கையின் புதிய அரசாங்கம் அரசி யல் சீர்திருத்தங்கள் தொடர்பில் அக் கறை காட்டுகின்ற நிலையில், உறுதி மொழிகள் அர்த்தமுடைய நடவடிக்கை களாக மாறுவதை உறுதிப்படுத்துவதில் சிவில் சமூகத்தினால் ஒரு பயனுறுதியுடைய பாத்திரத்தை வகிக்க முடியும்.

இந்தியாவினதும் அமெரிக்காவினதும் அணுகுமுறைகள் காரணமாக சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் ஏற்படுகின்ற வெற்றிடம் அந்த களத்தில் புதிதாக பிரவேசிக்கும் ஒரு நாட்டினால் நிரப்பப்படக் கூடும். சீனாவின் தேசிய இன விவகாரங்கள் ஆணைக்குழுவுக்கு பொறுப்பான அமைச்சர் தலைமையிலான உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று பெப்ரவரி 19 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்ய விருப்பதாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. இனத்துவ விவகாரங்களைக் கவனிக்க சீனாவில் அத்தகைய அமைச்சு ஒன்று இருக்கிறது என்பதை அறியாத இலங்கை மக்களின் கண்களை அந்த தூதுக் குழுவின் விஜயம் திறக்க வைக்கும். தூதுக் குழுவின் தலைவரான அமைச்சர் பான் யூ இன சௌஜன்யம் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து இலங்கையில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவிருக்கிறார்.

அதேவேளை, பெருமளவு வாழ்வாதார உதவித் திட்டங்கள் ஊடாக இலங்கையின் வடக்கில் சீனா தொடர்ந்து ஊடுருவல்களைச் செய்கிறது என்றும் புதிய செய்திகள் வருவதும் கவனிக்கத் தக்கது. அமெரிக்காவின் புதிய அரசாங் கம் அதன் வெளிநாட்டு உதவிகள் அதன் தேசிய நலன்களுக்கு இசைவானதாக இருக்க வேண்டியது அவசியம் என்று வெளிப்படையாகவே கூறிவருகின்றது.

தொலைவில் இருக்கின்ற ஒரு தீவு என்ற வகையில் அமெரிக்க அரசாங்கத்தின் முன்னுரிமைப் பட்டியலில் இலங்கை ஓர் உயர்ந்த இடத்தைப் பெறுவது சாத்தியமேயில்லை. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை, இலங்கை உயர்ந்த முன்னுரிமைக்குரியதாகவே இருக்கும். அதனால், இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதில் இந்தியா மீண்டும் அக்கறை காட்டக்கூடிய சூழ்நிலை உருவாகவும் கூடும்.

## தமிழ் தலைவர்களின்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியத்தைவிட சிறீலங்கா தேசி யத்துக்கு முன்னுரிமை கொடுத்து வரும் சுமந்திரன் தமிழ் மக்களுக்கோ அல்லது நாட்டுக்கோ நன்மைதராத இவ்வாறான முன்னெடுப்பில் ஈடுபடுவதன் நோக்கம் என்ன? இதன்பின்னால் அனுரவின் ஆட்சியை விரும்பாத உள் நாட்டு, வெளி நாட்டு சக்திகளின் தூண்டுதல் ஏதும் உள்ளனவா?

நாடாளுமன்றில் அதிக ஆசனங்களைப் பெறுவதற்கும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குமான உத்தியாக அரசியல் கட்சிகள் தேர்தல் கூட்டுக்களை ஏற்படுத்திக்கொள்வது அரசியல் முறைமை என்றாலும் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்து அதற்கும் மேலான ஒரு பொறுப்பு ஒன்றுள்ளது. நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெறுவதற்கும் அதன்மூலம் தமிழ் மக்களின் பேரம்பேசும் வல்லமையை அதிகரிப்பதற்கும் அதன்மூலம் தமிழ் மக்களின் இருப்பைத் தக்கவைப்பதற்கும் இன்றைய களநிலைமைகளில் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறாதவகையில் அவர்களை ஒரேகுடையின் கீழ் அணி திரட்டுவதே அப்பொறுப்பாகும். அதை விடுத்து தலைவர்கள் தங்கள் தங்கள் இருப்புக்கும் பதவிக்குமாக அரசியல் கூட்டுக்களை அமைக்க முயல்வது மேலும் பாதகமான விளைவுகளையே தமிழ் மக்களுக்கு விளைவிக்கும்.

## சட்டநடவடிக்கை...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளற ஆரம்பித்துள்ளது. கொள்ளையடித்தவர்கள் மற்றும் மோசடிக்காரர்கள் மீது அநுர ஆட்சிக்கு வந்து மூன்று மாதமாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை யென்ற குற்றச்சாட்டு இவர்கள்மீது வீசப்பட்டு வந்தது. இதனைத் தனது பலமாக்கிய நாமல் ராஜபக்ச பலதடவைகள் நாடாளுமன்றத்திலும் பொதுவெளியிலும் முடிந்தால் எங்கள் மீது நடவடிக்கை எடுங்கள் என்று பகிரங்க சவால் விடுத்து வந்தார்.

அநுர அரசு அதிரடியாகவன்றி ஆற அமர்ந்து பொலிஸ் விசாரணை, நீதித் துறை விசாரணைகளூடாக தனது வேலையை ஆரம்பித்துள்ளது. நடவடிக்கை எதனையும் எடுக்காதிருந்த வேளையில் அநுர தரப்பைப் பார்த்து, முடிந்தால் எங்களைக் கைது செய் என்று சவால் விட்ட நாமல் ராஜபக்ச, இப்போது சட்டம் தனது கடமையை செய்ய ஆரம்பிக்கையில் இது அரசியல் பழிவாங்கல் என்று கூச்சலிடுகிறார்.

இதுதான் இலங்கை அரசியல். குடும்ப அரசியல் போர்வைக்குள் ஒளிந்து வாழ முனையும் அரசியல் வாதிகளுக்கு 'அரசியல் பழிவாங்கல்' என்பது என்றுமே தங்கள் ஆதரவாளர்களை இழுப்பதற்கான ஒரு வாய்ப்பாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின் நம்பிக்கையை...

நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சிகள் பழைய அரசியல் கலாசாரத்திலிருந்து இன்னும் மீண்டு வரவில்லை. அதனால்தான் கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் வென்றால்கூட பட்டாசு கொளுத்தி கொண்டாட்டங்களில் ஈடுபடுகின்றனர். அவர்களின் அரசியல் வங்குரோத்து நிலையை அது வெளிப்படுத்துகின்றது. நாம் அவ்வாறு செயற்படப்போவதில்லை. மக்கள் விரும்பும் மாற்றமே எமது நோக்கம்.

தேசிய சமத்துவத்தை ஏற்படுத்தி இலங்கையர்களாக சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் செயல்பட்டு வருகின்றோம். இதனால் எதிரணிகள் கலக்கமடைந்துள்ளன. இனவாதத்தை ஒரு புறம் வைத்துவிட்டு வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மக்கள் ஒரு கட்சிக்கு வாக்களித்துள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தோழர் அண்மையில் யாழ். சென்றிருந்த போது அம்மக்களின் அன்பும் நம்பிக்கையும் கிடைக்கப் பெற்றது. எமக்கு தெரிந்த வரலாற்றில் வடக்கு மக்கள் தேசியக் கொடியுடன் இம்முறை சுதந்திரத் தினத்தைக் கொண்டாடினார்கள். கிழக்கிலும் அவ்வாறு நடந்துள்ளது.

ஒரு நாட்டுக்குள் வாழ்வதற்கு தயார் என அம்மக்கள் செய்தி வழங்கியுள்ளனர். இது பெரும் வெற்றியாகும். மக்களின் நம்பிக்கையை ஒருபோதும் விலை கொடுத்து வாங்கமுடியாது- என்றார்.

## அரியாலை...

முடிவுறாத நிலையில்தான் இந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனிதப் பற்கள், எலும்புகள், மண்டையோடு போன்ற மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த மயானத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் ஆகியோர் நேற்று பார்வையிட்டனர்.

அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

தகன மேடை ஒன்றை அமைப்பதற்காக நல்லூர் பிரதேச சபையினர் மயானத்தின் மேற்கு பக்கமாக கிடங்கு தோண்டியபோது மனித எலும்புகள் மீட்கப்பட்டன. இருப்பினும் நல்லூர் பிரதேச சபையோ அல்லது குறித்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டவர்களோ இதுவரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யவில்லை.

இந்நிலையில் எமது கட்சியின் உறுப்பினரான கிருபா இந்த மயானத்தின் நிர்வாகத்தில் ஓர் உறுப்பினராகவும் காணப்படுகின்றார். அந்த வகையில் இச்சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அவருக்கு நாங்கள் தெரிவித்துள்ளோம்.

இந்தப் பிரதேசம் அண்ணளவாக 600 தமிழ் பொதுமக்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட இடமாக சொல்லப்படுகின்றது.

கிருஷாந்தி படுகொலை வழக்கில் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்ட நபர் தெரிவித்த தகவலில் இந்த செம்மணி சம்பவங்கள் அம்பலமாகின. அந்த வகையில் அவர் 10 இடங்களை கூறிய நிலையில் அவற்றில் இரண்டு இடங்களில் மாத்திரமே தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய இடங்களில் கணிசமான அளவு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

இந்த மயானத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை இராணுவத்தின் முகாம் அமைக்கப்பட்டு காணப்பட்டது. அங்கு இறந்தவர்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. தற்போது உள்ள தகன மேடைக்கு கிழக்கு புறமாகத்தான் புதைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இந்த மனிதப் புதைகுழி குறித்து தீவிரமாக ஆராய்வது முக்கியமான ஒன்றாகும். செம்மணி படுகொலைகளின் தகவல்கள் அம்பலமாகிய நிலையில் அது தொடர்பான விசாரணைகள் முடிவுறாத நிலையில் தான் இந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது-என்றார்.

## பெரமுனவில்...

முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக சுமார் 25 பேர் இவ்வாறு மீளக் கட்சியில் இணையவுள்ளனர் என்று அறிய வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இந்த உறுப்பினர்கள் மூன்று தடவை கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளதுடன் கட்சியில் மீள இணையவும் தீர்மானித்துள்ளனர்.

இவ்வாறு மீளக் கட்சியில் இணையவுள்ள குழுவினர் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிட்டிருந்தனர்.

இந்தக் குழு மீளக் கட்சியில் இணைந்த பின்னர் மற்றுமொரு குழுவினரும் மீள பொதுஜன பெரமுன கட்சியில் இணையவுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. -(அ)

## உயர்தரமான...

இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்தார். அங்கு மாணவர்கள் மத்தியில் உரையாற்றியபோது அவர் இதனை கூறினார்.

மேலும், யாழ்ப்பாண மக்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை நான் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன். யாழ்ப்பாணம் எப்போதும் நல்ல கல்வி மையமாக இருந்து வருகிறது. ஆனால், இந்தக் கலாசாரம் நமது கடந்த கால பெருமைகளைப் பற்றி மட்டும் பேசாமல், எதிர்காலத்திலும் முதலீடு செய்வதை உறுதி செய்யவேண்டும்.

மீண்டும் ஒருமுறை, நமது சமூகத்தில் கல்வி ஒரு முன்னுரிமையாக மாறுவதையும், நல்ல கல்வியில் முதலீடு செய்வதையும் நாம் உறுதி செய்யவேண்டும். இதுவே நமது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இதைக் கருத்தில் கொண்டு, கல்வியில் கணிசமான சீர்திருத்தங்களைத் திட்டமிடுகிறோம். கல்வி முறையைப் பற்றிப் பேசுகையில், பகுதிநேர வகுப்பு ஒரு சுமையாக மாறி வருவதைப் பற்றி அதிபர் பேசினார். உங்கள் அனைவருக்கும் தெரியும், நமது கல்வி முறையின் தோல்வியால் பகுதிநேர வகுப்பு வளர்ச்சியடைந்தது.

எனவே பகுதிநேர வகுப்புகளைக் குறைக்க விரும்பினால், ஒவ்வொரு மாணவர்களுக்கும் பாடசாலைக்குள் ஒரு சிறந்த கல்வி முறை கிடைப்பதை உறுதி செய்யவேண்டும். நமது கல்வி முறை எந்த மாணவர்களையும் பாடசாலையை விட்டு வெளியேற இடமளிக்கக்கூடாது.

எந்த மாணவரும் பாடசாலை கல்வியை விட்டுவிடக்கூடாது என்பதை நாங்கள் உறுதி செய்ய விரும்புகிறோம். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் மட்டுமல்ல, நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு மாணவரும் உயர்தரக் கல்வி முறையால் பயனடையவேண்டும் என்பதே எங்கள் கனவு. ஒவ்வொரு மாணவருக்கும் உயர்தர கல்வி முறை கிடைப்பதையும், எந்த ஒரு மாணவரும் பின்தங்கியிருக்கக் கூடாது என்பதையும் உறுதி செய்வதே எங்கள் குறிக்கோள்.

இந்தக் கல்விச் சீர்திருத்தத்துக்கான எங்கள் திட்டங்களைப் பற்றி உங்களுடனும் வடக்கு மாகாணத்தில் உள்ள மற்றவர்களுடனும் விவாதிக்க நான் ஆவலுடன் காத்திருக்கிறேன். இந்த சீர்திருத்தங்கள் யதார்த்தமாக மாறுவதை உறுதி செய்வதில் நீங்கள் எங்களுடன் பங்காளிகளாக இருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களுடன் மேலும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளேன் -என்றார்.

## ரணில்...

அவர் அங்கு செல்கின்றார்.

எதிர்வரும் புதன்கிழமை ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பவுள்ளார் அதன்பின்னர் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது. (அ)

## அநுரவின்...

மதிப்பீட்டுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது. அத்துடன் இந்த மாதம் 25 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பி.ப 6.00 மணிக்கு நடத்தப்படும். பாதீட்டு காலப்பகுதியில் காலை 9.30 மணி முதல் 10.00 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையான காலப் பகுதியில் பாதீட்டு விவாதம் இடம்பெறும்.

வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21ஆம் திகதிகள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் மாலை 6.00 மணி முதல் 6.30 வரையான காலப்பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். (அ)

## பலாலி...

ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆளுநர் விரிவாகக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வனவளத் திணைக்களம் மற்றும் வனவிலங்குகள் திணைக்களம் என்பன காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்த முறைமை தவறானது. அதனால் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இடம்பெயர்ந்த மக்கள் தங்களது சொந்தக் காணிகளையே விடுவிக்குமாறு கோருகின்றனர். பாதுகாப்புத் தரப்பினரின் காணிகளைக் கோரவில்லை. ஆனால் இங்கு காணிகள், பாதைகள் விடுவிக்கப்படும்போது தெற்கில் தவறாக சித்தரிக்கப்படுகின்றது.

சுற்றுலாத்துறையில் அபிவிருத்தி அவசியம். பாதை வலையமைப்பு மேம்படுத்தப்படவேண்டியுள்ளது. பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி, பயணிகள் கப்பல் போக்குவரத்து என்பவையும் சிறப்பாக மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார்.

அதன்போது, பலாலி விமான நிலையத்துக்கு கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து சேவைகள் இடம்பெற்றால் சிறப்பானது. இலங்கைக்கு வருகை தரும் புலம்பெயர் தமிழர்கள், தமது பயணப் பொதிகளை பேருந்துகளில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவிட்டு, கொழும்பிலிருந்து சென்னைக்குச் சென்று அங்கிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றனர் எனத் தூதுவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் பலத்த எதிர்பார்ப்பு நிலவுவதாகவும் குறிப்பிட்ட தூதுவர், அரசாங்கம் கூறிய விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மக்கள் ஆவலாக இருக்கின்றமையை தான் சந்தித்த சிவில் சமூகக் குழுக்களிடமிருந்து அறியகக் கூடியதாக இருந்ததாக குறிப்பிட்டார். (அ)

## வாகனம்...

நோக்கி தனக்குச் சொந்தமான வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது, வாகனம் தனங்களப்புப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் பாராளுமன்ற உறுப்பினருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## அரச சார்பற்ற...

அச்சுறுத்தியதால் பொதுத் தேர்தலில் வாக்குகள் குறைந்திருந்தன.

ஆனால், அவர்களது கருத்துகள் பொய்யானவை என தற்போது மக்கள் உணர்ந்துள்ளதால் உள்ளூராட்சித் தேர்தலில் எமக்கான வாக்குகள் மேலும் அதிகரிக்கும்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பில் எதிர்காலத்தில் உன்னிப்பாக அவதானிக்கப்படும். அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம்தான் அவர்கள் எதிர்காலத்தில் செயல்பட முடியும். புதிய அரச சார்ப்பற்ற நிறுவனம் ஒன்று இலங்கையில் செயல்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என்றால், அரசாங்கத்தின் வரையறைகளுக்கு உட்படவேண்டும்.

யு.எஸ். எய்ட் நிறுவனம் தொடர்பில் பல்வேறு கருத்துகள் உள்ளன. அந்த நிறுவனம் பொருளாதார வளர்ச்சி உட்பட பல்வேறு திட்டங்களுக்காக நிதியை வழங்கியுள்ளது. அதேபோன்று அரசியல் மாற்றம் உட்பட பல்வேறு அரசியல் நோக்கங்களுக்காகவும் குறித்த நிறுவனம் நிதியை வழங்கியிருக்கலாம். இந்த நிறுவனத்திடமிருந்தது நிதியை பெற்று கடந்த காலத்தில் எவ்வாறு செலவழித்துள்ளனர் என விசாரணைகள் முன்னெடுக்கப்படும்-என்றார். (அ)

## தமிழ் மக்களின் ...

யாழ்ப்பாணத்துக்கும் மன்னாருக்கும் எல்லைப் பாதுகாப்பு இல்லை, குறுகிய நேரத்தில் இந்தியாவின் இராமேஸ்வரத்துக்குச் செல்ல முடியும் என்பதன் காரணமாகவே அண்மைக் காலமாகச் சீனாவின் பார்வை வடக்கை நோக்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் கூறினார்.

சீனா இலங்கைக்கு உதவி செய்வதை விட இலங்கையிலுள்ள காணிகளையும் வளங்களையும் தனதாக்கிக் கொள்ளும் வகையிலேயே செயற்படுவதாக அவர் தெரிவித்தார். (அ)

## யாழில்...

தொடர்ந்து அங்கு ஆசிரிய மாணவர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆளுநர் பங்கேற்றதுடன், தேசிய கல்வியற் கல்லூரி சமூகத்தால் ஆளுநர் மதிப்பளிக்கப்பட்டார்.

தேசிய கல்வியற் கல்லூரியில், வடக்கு மாகாண கல்வித்துறையினர் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ. இளங்கோவன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் ம. பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் வடக்கு மாகாணத்தின் கல்வி நிலைமைகள் தொடர்பாக பிரதமருக்கு விரிவாக எடுத்துரைத்தனர். இதன் பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் புனரமைக்கப்பட்ட நூலகத் திறப்பு விழாவிலும், பிரதமர் பங்கேற்றார். யாழ். இந்துக் கல்லூரிக்கு சென்ற அவர் அங்கு நடந்த நிகழ்விலும் பங்கேற்று உரையாற்றினார்.

தொடர்ந்து நேற்று மாலை ஏழாலை, சுழிபுரம், சண்டிலிப்பாய் பகுதிகளில் நடைபெற்ற மக்கள் சந்திப்புகளிலும் பிரதமர் பங்கெடுத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# கனேடிய அரசின் உதவிகளை இன்னும் எதிர்பார்க்கின்றோம்

## வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், பெப். 16

பெண் தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் செயற்பாடுகளை வரவேற்பதோடு கனேடிய அரசாங்கத்திடமிருந்தும் இன்னமும் உதவிகளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பெண்களை வலுப்படுத்தும், 'எம்பவர் பெண்கள்' நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷும் பங்கேற்றார்.

இங்கு ஆளுநர் உரையாற்றும் போது,

கனேடிய அரசாங்கம் கடந்த காலத்தில் குறிப்பாக இறுதிக் கட்டப் போர் ஆரம்பித்த தருணங்களில் எமது மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தது.

வடக்கிலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முன்கொண்டு செல்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த நிலையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பெண்களை வலுவூட்டுவது சிறப்பானது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் அக்கறையாக உள்ளது.

உலக வங்கியினர், ஐ.நா.வின் அனைத்து முகவர் அமைப்பினர் எனப் பல தரப்பட்டவர்கள் அண்மையில் எம்மை வந்து சந்தித்திருந்தனர்.

எமது தேவைப்பாடுகளைக் கூறியிருக்கின்றோம். எங்களுடைய ஏற்றுமதியை அதிகரிப்பதன் ஊடாக வலுவூட்டுவதற்கு முயற்சிகளை முன்னெடுக்கின்றோம் அதற்கான உதவிகளை எதிர்பார்க்கிறோம் என மேலும் தெரிவித்தார். (அ)

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார்



கொழும்பு, பெப்.16

2020ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு கட்சியாக ஆரம்பிக்கப்பட்டது. 7 மாதங்களுக்குப் பிறகு, நாம் ஒரு பொதுத் தேர்தலை எதிர்கொண்டோம். சுதந்திர ஜனநாயக வரலாற்றில் குறுகிய காலத்தில் ஒரு கட்சியாகப் போட்டியிட்டு அதிக எண்ணிக்கையிலான ஆசனங்களையும் வாக்குகளையும் வென்றெடுத்தோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டோம். தற்போது உள்ளூராட்சித் தேர்தல் வந்துள்ளது. இதனை நாம் வெற்றிகரமாக எதிர்கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கட்சிக்கென்று எந்த உறுப்பினர்களும் இல்லாமல் கடந்த மூன்று தேர்தல்களிலும் எமது கட்சி பேட்டியிட்டது. அப்போது இருந்த ஐ. தே. க. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மிகுந்த நம்பிக்கையோடு ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்தனர். அவர்களில் 74 பேர் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு பதவி பறிக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியினது அல்லது தொலைபேசி சின்னத்தினது பயணமென்பது தற்காலிகமானதல்ல. இது நெடுந்தூர பயணம் என்றும் சஜித் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

## வெப்பநிலை அதிகரிக்கும்!

கொழும்பு, பெப். 16

நாட்டில் வெப்பநிலை அதிகரிக்கும் நிலை காணப்படுவதாக வானிலை அவதான நிலையத்தின் வானிலை அதிகாரி மலித் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த நாட்களை பார்க்கிலும் நாட்டில் வெப்ப நிலை அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் அதிகாலைவேளையில் குளிரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடமத்திய, சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற் பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக மன்னார் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. - என்றார். (அ)

# 3 இலட்சத்து 40 ஆயிரம் இலங்கையர் இந்த ஆண்டில் புலம்பெயர வாய்ப்பு

கொழும்பு, பெப். 16

இந்த ஆண்டு 3 இலட்சத்து 40 ஆயிரம் இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புறப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் நிலவும் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு 3 இலட்சத்து 40 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு செல்ல எதிர்பார்த்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத் தலைவர் கோசல விக்ரமசிங்க தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன பிரதிநிதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் கலந்து



கொண்ட அவர், கடந்த ஆண்டில் 3 இலட்சத்து 14 ஆயிரம் இலட்சம் பேர் வேலைக்காக வெளிநாடு சென்றதன் மூலம் 6.51 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணி நாட்டுக்குக் கிடைத்துள்ளதாகவும், இந்த ஆண்டில் அந்தத் தொகை 7 பில்லியன் டொலராக அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுவாக, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்லும் இலங்கையர்கள் பெரும்பாலும் வீட்டு வேலை, கட்டுமானத் தொழில், தொழில்துறை மற்றும் கணினி தொழில்நுட்பத் துறைகளில் அதிகமாக வாய்ப்புகளைப் பெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையர்கள் வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான உள்வாங்கல் முறைகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் புதிய திட்டங்களை செயல்படுத்தவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

## அதிகரித்துவரும் சுவாச நோய்கள்

கொழும்பு, பெப். 16

இலங்கையில் சுவாசத்துடன் தொடர்புடைய நோய்கள் தற்போது அதிகரித்து வருவதாக விசேட வைத்தியர் நெரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்தார். இதனால், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் முதியவர்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்பள்ளிக்குச் செல்லும் சிறுவர்கள் இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகளைக் கண்டால், அவர்கள் வீட்டில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் இந்த தொற்று பரவும் அபாயம் உள்ளது. இதனால், பெற்றோர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

அத்துடன், 65 வயதுக்கு மேற்பட்ட முதியோரும், சிறுநீரகப் பிரச்னை மற்றும் நீண்ட கால நோய்களுக்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளும் தற்போதைய காலநிலை மற்றும் சுவாச நோய்களின் அபாயங்களை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (அ)

## 2 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்ற பொதுச்சுகாதார பரிசோதகர் கைது

மாத்தளை, பெப்.16

ஹோட்டல் ஒன்றின் உரிமப்பத்திரத்தை மீளப் புதுப்பிப்பதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் பொதுச்சுகாதார பரிசோதகர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பாகமுவ பிரதேசத்தில் வசிக்கும் நபரொருவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளிடம் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்

கலேவெல சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் கடமையாற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இப்பாகமுவ பிரதேசத்தில் உள்ள நபரொருவருக்குச் சொந்தமான ஹோட்டல் ஒன்றின் உரிமப்பத்திரத்தை மீளப் புதுப்பிப்பதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் இலஞ்சம் கோரியுள்ளார்.

இந்த நிலையில், இலஞ்சப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக பொதுச்சுகாதார பரிசோதகர் தல்கிரியாகம பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் மாலை சென்றிருந்த போது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை தம்புள்ளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# சுற்றுச்சூழல் பிரச்னையை முறையிட புதிய வட்ஸ்அப் இலக்கம் அறிமுகம்

கொழும்பு, பெப்.16

நாட்டில் இடம்பெறும் சுற்றுச்சூழல் பிரச்னைகள் தொடர்பில் முறையிடுவ தற்கு புதிய வட்ஸ்அப் இலக் கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தாக சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப் புக்காக பொதுமக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் இந்த வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, சுற்றுச்சூழல் பிரச்னைகளை 076 641 2029 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு குறுஞ் செய்திகளாக அனுப்பலாம்.

இந்த வட்ஸ்அப் இலக்கமானது திங்கள் முதல் வெள்ளி வரை காலை 07.00 மணி முதல் இரவு 07.00 மணிவரை சேவையில் இருக்கும்.

பொது மக்களால் முன்வைக்கப்படும் சுற்றுச்சூழல் பிரச்னைகள் குறித்து, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றுச்சூழல் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.2.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org